Registerd as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 11 [25-06-98] வெள்ளிக்கிழமை ஓசை 127

## பொது லிகிதர் சேவைக்கு 1000 பேருக்கு நியமனம்

1992ஆம் ஆண்டு நடைபெற்ற பொது லிகிதர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களில் சுமார் 1000 பேருக்கு லிகிதர் நியமனம் வழங்கப்படவுள்ளது. இந்நியமனம் வழங்குவது தொடர்பாக பொதுநிர்வாக, மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது. மேற்படி பரீட்சையில் மாவட்டமட்டத்தில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றபொதுலிகிதர்சேவைநியமனத்துக்கு விண்ணப்பித்தவர்களில் 1000பேருக்கு நியமனம் வழங்குவதற்குப் பொதுநிர்வாக அமைச்சு திட்ட அமுலாக்கல் அமைச்சின் அங்கீகாரத் (09 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியால் உணவு வாகனங்கள்; ஐ. நா. அதிகாரிகள் யாழ். வருவர்

## அடுத்த வாரம் பேச்சு

(யாழ்ப்பாணம்)

பூநகரிப்பாதை ஊடாக யாழ். குடாநாட்டிற்குள் உணவு வாகனங்களைக் கொண்டு வருவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவெ ா அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் அடுத்த வாரம் யாழ். வரவுள்ளனர். இதேவேளை இக்குழுவினர் கேரதீவு இறங்குதுறையையும் பார்வையிடுவர்.

யாழ். வரவுள்ள இவ் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய குழுவில் இந்நிறுவனத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரியும் கொழும்பு வதிவிடப் பிரதிநிதியான டாக்டர் நிக்கிலசும் இடம்பெறவுள்ளனர்.

அடுத்த வாரம் வரும் இக்குழுவினர் பூநகரிப் பாதை ஊடாக குடா நாட்டிற்குள் உணவு வாகனங்களை அனுமதிப்பது தொடர்பாக புலிகளுடன்பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர். கடந்த முறை அகதிகளுக்கான ஐ. நா. கொழும்பு வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பீற்றர் நிக்கிலஸ் யாழ். வந்தபோது பூநகரிப் பாதை திறக்கப்படும் பட்சத்தில் புலிகளும், இராணுவமும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறை பற்றி விரிவாக ஆராயப்பட்டிருந்தமை தெரிந்ததே.

மேலும், அடுத்த வாரம் வரும் இக்குழுவினர் தரைவழியாகச் சென்று கேரதீவு இறங்குதுறையையும் பார்வையிடுவர் எனவும் தெரியவருகிறது.

## விவசாயத் தேவைக்கான பொருள்களின் அளவைதருக

### செயலகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்றபோது விவசாயம் சம்பந்தமாக பாவிக்கப்படும் தடைநீக்கம் செய்யப்பட்ட பொருள்களின் தேவையான அளவைத் தருமாறு சம்பந்தப்பட்ட விவசாய நிறுவனங்கள் கேட்கப்பட்டுள்ளன.

மேற்படி கூட்டத்தில் 1993 ஆம், 94ஆம் ஆண்டுக்கான விவசாய செயற்பாடுத் திட்டம் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. (சி)

## யாழ்-வன்னிதொடர்புசேவை செயலகங்கள் இடமாற்றம்

நெருக்கடிகால யாழ். வன்னி தொடர்புச் சேவைச் செயலகங்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இச்சேவைக்கான செயலகங்கள் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதிக் கூட்டுத் தாபனக் கட்டடத்தில்) கிளிநொச்சியில் கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும் இயங்கி வந்தன.

ஆனால் தற்பொழுது இச்சேவைக்கான செயலகங்கள் இடமாற்றம் செய்யப்பட்டு ஸ்ரான்லீ வீதியில் (அருச்சுனா வீதி), ஆரியர் குளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சியில் பெற்றோலியகூட்டுத்தாபனத்திற்கு அண்மையிலுள்ள கட்டடத்திலும். மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கி வருகின்றது என்பதனை போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு பொதுமக்களுக்கு அறியத்தருகின்றது.

பொருளாதார தடை தளர்வு

## புலிகளின் பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கை

### சிரேஷ்ட இராணுவ அதிகாரி கவலை

(கொழும்பு)

பொருளாதாரத்தடை தளர்த்தப்பட்டதையிட்டு கொழும்பில் பல சிரேஷ்ட ராணுவ அதிகாரிகள் கவலையுற்றிருப்பதாகவும் இது புலிகளின் போராட்ட பலத்தை அதிகரிக்கும் ஒரு செய்கையாக அமைந்துவிடும் என அவர்கள் கருதுவதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்த இராணுவ உயர் அதிகாரியொருவர் வடபகுதிக்கு எரிபொருள்களை அனுப்புவது புலிகளுக்கு ஒட்சிசன் கொடுப்பதுபோல அமைந்து விடப்போகிறது எனக் குறிப்பிட்டார்.

இதுவரை காலமும் இராணுவத்தினர் மேற்கொண்ட கடும் நடவடிக்கைகளினால் புலிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். பொருளாதாரத் தடையினால் புலிகளின் குரல்வளை நசுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் புலிகளுக்கு மீண்டும் பலம் சேர்க்கும் நடவடிக்கையாக இவ் எரிபொருள் அனுப்பும் செயல் அமைந்துவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று வவுனியா நகரில் எரிபொருள், சைக்கிள் என்பவற்றுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

# அராலிக் கண்ணிவெடி புலிகளே காரணம்

### சர்வதேச விசாரணைக்குழு முடிவு

(கொழும்பு)

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கொலைக்குக் காரணமாக இருந்தது வெடிகுண்டு அல்ல அது தரையில் புதைத்துவைக்கப்பட்டிருந்த தரைக்கண்ணியே என்று மேற்படி சம்பவம்பற்றி விசாரணை நடாத்திய சர்வதேச ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் வகையைச் சேர்ந்த தரைக்கண்ணியாகும். குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்தில் இந்தத் தரைக்கண்ணி புதைக்கப்பட்டிருந்தது.

அராலி குண்டு வெடிப்புச் சம்பந்தமாக விசாரணை நடத்திய சர்வதேச விசாரணைக் குழுவில் ஒருவரான கெனத் ஜேம்ஸ் விசாரணைக் குழுவின் அறிக்கையை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

இந்தத் தரைக்கண்ணிவெடி விடுதலைப்புலிகளினால் புதைக்கப்பட்டு இராணுவத்தினரால் கண்டு பிடிக்கப்படாத ஒன்றாக இருந்திருக்கலாம். அல்லது வாபஸ்பெற்றபின்னர் புலிகள் ஊர்காவற்துறைப் பிரதேசத்திற்குள் ஊடுருவி அதைப் புதைத்து வைத்துச் சென்றிருக்கலாம் என்று சர்வதேச ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆயினும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எந்த அங்கத்தவர்கள் இதில் சம்பந்தப்பட்டார்கள் என்பதைப் பற்றிக் கூறமுடியாது என்றும் ஆணைக்குழு அதன் அறிக்கையில் கூறியுள்ளது.

இந்தச் செயலுக்குப் பொறுப்பானவர்களுக்குப் புலிகள் இயக்கம் பரிசு வழங்கியிருப்பதாகப் பத்திரிகைச் செய்தி வெளிவந்திருந்ததையும் ஆணைக்குழு சுட்டிக்காட்டி [10ஆம் பக்கம் பார்க்க)

## றுகுணு கப்பல் நேற்றுப் புறப்பட்டது

(கொழும்பு)

தடை நீக்கம்செய்யப்பட்ட உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களைஏற்றிக்கொண்டு றுகுணு கப்பல்நேற்றுபருத்தித்துறைநோக்கிப் புறப்பட்டுள்ளதாகரூபவாகினி அறிவித்தது.

இக்கப்பல் இன்று புறப்பட இருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இக்கப்பலில் எரிபொருள், எண்ணெய் மற்றும் உரவகைகள் எடுத்துவரப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார தடை தளர்வு பேச்சுக்கு இட்டுச் செல்லுமா?

### பி. பி. ஸி. விமர்சனம்

(லண்டன்)

அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு முன்னர் பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும் எனத்தெரிவித்து வந்துள்ளனர் இப்பொழுது பொருளாதாரத் தடையில் தளர்வு ஏற்பட்டு (10ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நினைவாக பாரம்பரிய விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜூலை 5ஆம் திகதி நடைபெறவிருக்கும் 'கரும்புலிகள்' நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் அரங்கப் போட்டிகளினதும், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளினதும் கோட்ட மட்டத் தேர்வுக்கான போட்டி நடைபெறும் நேரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்று வலிகாமம் கோட்டத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு சண்டிலிப்பாய் கல்வளை நற்தன் விளையாட்டு மைதானம், உடுவில் அலிஸ்ரன் விளையாட்டு மைதானம், சுன்னாகம் ஐயனார் விளையாட்டு மைதானம், அரியாலை காந்திஜி விளையாட்டு மைதானம், அரியாலை திருமகள் விளையாட்டு மைதானம், சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டு (10ஆம் பக்கம் பார்க்க)

புதிய அமைச்சர்

## பதவி ஏற்பு

புதிதாக இராஜாங்க அமைச்சர் ஒருவரும், அமைச்சர் ஒருவரும் நேற்று பதவி ஏற்றுக் கொண்டனர். டாக்டர் பி. எம். பி. சிறில் சுற்றாடல் அமைச்சராகவும், கே. பி. ஹரிந்தரநாத் துனுவில அரசியல் யாப்பு அரசலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். ஜனாதிபதி முன்னிலையில் இவர்கள் நேற்று பதவி ஏற்றுக்கொண்டனர்.

## கடற்படையினரின் சூட்டுக்கு மீனவர் ஒருவர் படுகாயம்

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினர் குறிவைத்துச் சுட்டதில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். கன்னத்தில் படுகாயமடைந்த இவர்பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் இன்பருட்டிக் கடற்பரப்பில் நடைபெற்றது. இன்பருட்டியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் மகாலிங்கம் (வயது 44) என்பவரே கடற்படையினரின் சூட்டுக்குஇலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். இவருடன் சென்ற செல்வநாயகம் கண (10ஆம் பக்கம் பார்க்க,

## வரி விளம்பரம்

### ஹோட்டல் ஞானம்ஸ்

புதிய மெருகுடன் உள் நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கும், தரமான சுவையான உணவுபார்சல்கள், (முன் கூட்டியே ஓடருக்கும்) மற்றும் குளிர் பானம். மது பானம் அருந்துவதற்கும் திருமண வைபவங்கள், விருந்துபசாரங்கள் எதுவானாலும் உங்களை வரவேற்கின்றது- ஹோட்டல் ஞானம்ஸ்

(சி/6877)

### ஒலிவ் ஸ்நானப்பவுடர்

சீயக்காய், வெந்தயம், எலுமிச்சங் கோது, பயறு மற்றும் சிரசுக்கும் உடலுக்கும் இதமளிக்கும்மூலிகைகள் கொண்டு தயாரானது ஒலிவ் ஸ்நானப் பவுடர். கொதி நீரில் ஊற விடடுப் பாவிக்கச் சிறந்த பயன் பைக்கற்ஒன்று ரூபா3/- மட்டும். — மிலக்வைற்.

(சி 6881)

### கார் கசற் ரேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம்திருத்தக் கொடுத்து. பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-6849)

### வகுப்புக்கள்

O/L Yr 10 வகுப்புகள் யாவும் நடை பெறுகின்றன. விசேட ஆங்கிலம் English with Grammar and SpokenEnglish வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. SHAMROCK. யாழ் சுண்டுக்குளி.

(சி/6890)

### விற்பனைக்கு

சுத்தமான பசுப்பால் தயிர், தரமான கோழித்தீன், கல்சியப் பவுடர் (பிக்குற்றின்) மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்:யாழ் மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம் திருநெல்வேலி கிளைகள்:பால் கொள்வனவு விற்பனை நிலையம் இணுவில், உரும்பராய், சாவகச்சேரி பிரதான வீதி, பெருமாள்கோவிலடி(சி/6888)


### கொள்வனவு





(சி/6794)


## 60ஆம் மணிவிழா



எப்போதோ அணையவிட்ட
ஓவியக் கலைச் சுடரை
ஏற்றிச் சுடர வைத்து
இளையர் கை அளித்தாய்

ஒரு தாய் போல நீ இருந்தாய்
எங்களின் கலைப் பசி ஆறலில்
உன் தாகம் தீர்த்தாய்
குருவே! வாழி நீ பல்லாண்டு!!

60ஆவது வயதில் அடியெடுத்து வைக்கும்

**ஓவியர் மாற்கு** அவர்களுக்கு


எமது மனம் கனிந்த

பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

- மாணவிகள்

(5204)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி




அன்னையின் மடியில்:

08. 07. 1968

சிவமயம்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்:
10. 01. 1938

இறைவன் அடியில்:
27. 05. 1993

திதி:
26- 06- 1993

### அமரர் ஞானசேகரம் கணபதிப்பிள்ளை

அன்பின் சிகரமாய், பாசத்தின் விளைநிலமாய், எங்கள் குடும்பத்தலைவனாய் எம்மையெலாம் காத்து வளர்த்து, கூடவே வலவை வைத்தீஸ்வரன் நற்தொண்டனாய், அவன் ஆலயத்தொண்டுகள் பல ஆற்றி அமலன் அடி புகுந்துகொண்ட எம் தெய்வமே, உங்கள் நினைவலைகள் என்றென்றும் எம்நெஞ்சத்தில் நீங்காதுவீற்றிருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்டு முன்னின்று நடத்திய உயர்ந்த உள்ளங்களுக்கும், ஆறுதல்கள் வழங்கிப் பலவேறு ஒத்தாசைகள் புரிந்து எமமைப் பெருமைப்படுத்திய அயலவர், நண்பர்கள், உற்றார் உறவினர்கள் யாவர்க்கும் எமது நன்றிகள்.

நாளை 1993- 06- 26ஆம் திகதி அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் வீட்டுக் கிருத்தியங்களிலும் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

குச்சம் வீதி,
காந்தரூபன் வீதி,
வல்வெட்டித்துறை.

இவ்வண்ணம்
இவரது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், சகோதரி,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5213)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-25

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்-கரவெட்டியில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த-

**ரமேஸ்/ரவி** (பாலசுப்பிரமணியம் செல்வராசா "செல்வமணி நிலையம்" - கரணவாய் கிழக்கு, கரவெட்டி - யாழ்)

1986ஆம் ஆண்டு திருமலை - தம்பலகமம் பகுதிக் காட்டினில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்ட பெண் உட்பட 34 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். விஜி** (பொன்னுத்துரை ஏகாம்பரம் - கீதன் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி- யாழ்)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

மேற்குறிப்பிட்டவை யாதே ஹும் பழுதடைந்தால் அநுப வம் குறைந்தவர்களிடம்திருத் தக் கொடுத்து. பழுதையும் செலவையும் கூட்டிக் கொள் ளாமல் எம்மிடமே தந்து சிரம மின்றி குறைந்த செலவில் உத் தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை ம நாடுங்கள். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச் சேரி. (சி-6849)

### வகுப்புக்கள்

O/L Yr 10 வகுப்புகள் யாவும் நடை பெறுகின்றன. விசேட ஆங்கிலம் English with Grammar and SpokenEnglish வகுபபுகள் ஆரமபமாகியுள் ளன. SHAMROCK. யாழ் சுண்டுக்குளி. (சி/6890)

### விற்பனைக்கு

சுத்தமான பசுப்பால் தயிர், தரமான கோழித்தீன், கல்சியப் பவுடர் (பிக்குற்றின்) மொத்த மாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்: யாழ் மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம் திருநெலவேலி கிளைகள்: பால் கொள்வனவு விற்பனை நிலை யம் இணுவில, உரும்பராய், சாவகச்சேரி பிரதான வீதி, பெருமாள்கோவிலடி (சி/6888)

### கொள்வனவு

எமது தொழிற்சாலை உற் பத்திக்குத் தேவையான தவிடு, எள்ளுப்பிண்ணாக்கு அரைத்த சோளம், கால்நடைத்தீன் தயா ரிப்பதற்கு உகந்த அரிசி, மா, பருப்பு, பயறு நியாய விலை யில் கொள்வனவுசெய்யப்படும் வழங்க விரும்புவோர் தொட ர்புகொள்ளவும்யாழ். மாவட்ட அபிவிருத்திசகூட்டுறவுச்சங்கம் திருநெல்வேலி. (சி-6889)

### சோதிடம


உங்கள் நோய், திருமணம், சகோதர உதவி, வாகன யோகம், காதல் ஆயுள், வெளி யூர். லாபம், கல்வி, ஜாதகம் எழுத, பெயரமைக்க வேலணை சோதிடர் V A. சிவராசா, 152B, அரசடி றோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம் (5212)

### பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்களில் அளவை இயலும் விஞ்ஞான முறைகளும் பாட ஆசிரியர் களுக்கு நடைபெற இருந்த செயலமர்வு பிற்போடப்பட் டுள்ளது

எனவே அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங் கம் தெரிவித்துள்ளார். [பா]



எப்போதோ அணையவிட்ட
ஓவியக் கலைச் சுடரை
ஏற்றிச் சுடர வைத்து
இளையர் கை அளித்தாய்

ஒரு தாய் போல நீ இருந்தாய்
எங்களின் கலைப் பசி ஆறலில்
உன் தாகம் தீர்த்தாய்
குருவே! வாழி நீ பல்லாண்டு!!

60ஆவது வயதில் அடியெடுத்து வைக்கும்

**ஓவியர் மாற்கு** அவர்களுக்கு

எமது மனம் கனிந்த

பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

(5204) - மாணவிகள்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:

08. 07. 1968

ஆண்டவன் அடியில்

14. 06. 1990

உயர்திரு. **ஆறுமுகம்**

## ஸ்ரீவிஷ்ணுகாந்தா

(காந்தன்) T. A

(தொழில் நுட்பவியலாளர் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை-கிளிநொச்சி)

ஆசைமகனே! அன்பான கண்மணியே! தேசம்புகழவந்த செல்வ மகன் எம் காந்தா
நன்னாடார் போற்ற நலம் பலவும் ஈண்டும் நீ
இருபத்தொரு வருடம் இனிதுறவே நீ வாழ்ந்து
அன்னையும் தந்தையும் அன்பு மிகு சோதரரும் ஆருயிர்
மனைவியும் அன்பு மிகு மைத்துனரும் சுற்றத்தார் எல்லோரும்
துயரத்தில் ஆழ்ந்திருக்க மாதேவன் திருவடியில்
மலராய் மலர்ந்து விட்டாய் மூன்றாண்டு சென்றாலும்
உன் நினைவை நாம் மறவோம்.

''அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்''.

அம்பாள்வளவு,
குமரபுரம்,
பரந்தன்.
(5184)

இவர் பிரிவால் துயருறும்
மனைவி, தாய் தந்தை,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், உறவினர்கள்.

கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்டு முன்னின்று நடத்திய உயர்ந்த உள்ளங்களுக்கும், ஆறுதல் கள் வழங்கிப் பல்வேறு ஒத்தாசைகள் புரிந்து எமமைப் பெருமைப்படுத்திய அயலவர், நண்பர்கள், உற்றார் உறவினர்கள் யாவர்க்கும் எமது நன்றிகள்.

நாளை 1993-06-26ஆம் திகதி அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைக ளிலும் வீட்டுக் கிருத்தியங்களிலும் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக் கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

குச்சம் வீதி,
காந்தரூபன் வீதி,
வல்வெட்டித்துறை.

இவ்வண்ணம்
இவரது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், சகோதரி,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5213)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-06-25

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்-கரவெட்டி யில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த-

**ரமேஸ்/ரவி** (பாலசுப்பிரமணியம் செல்வராசா ''செல்வ மணி நிலையம்'' - கரணவாய் கிழக்கு, கர வெட்டி - யாழ்)

1986ஆம் ஆண்டு திருமலை - தம்பலகமம் பகுதிக் காட்டினில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்ட பெண் உட்பட 34 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சா வெய்திய-

**2-ம் லெப். விஜி** (பொன்னுத்துரை ஏகாம்பரம் - கீதன் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி- யாழ்)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குத லில் வீரச்சாவெய்திய-

**ஜாக்கி** (ஜெயசுந்தரம் கெங்காதரன் - சோடாக்கடையடி, மயிலியதனை - வல்வெட்டித்துறை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு பின் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப் பட்ட புதுமுகத்துவாரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன். சம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்காப்படையின ரால் சுட்டுக் கொல்லப்பட்ட 85 தமிழர்கள்.

திருமலை - கவாட்டிக்குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 03 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணு வத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப் பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன்.

1992ஆம் ஆண்டு பொலநறுவை - சிங்கபுரம் பகுதி யில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**அற்புதன்** (விபுலானந்தன் உதயகுமார்-மண்டூர், வெல்லா வெளி - மட்டு)

மட்டுநகரில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த.

**சசிக்குமார்** (தவராசா ரவிச்சந்திரன் - மகிழவெட்டுவான் - மட்டு)

யாழ் - கட்டைக்காட்டில் 23. 06. 1992 அன்று சிறி லங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப் புண் அடைந்து மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

**புகழரசன்/மதன்** (பொன்னையா சுதர்சன் - கோப்பாய் வடக்கு - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6884)

# இந்திய ராணுவ அடக்குமுறைச் சிறையை உடைத்தெறிய விளையும் காஷ்மீர்

பாலகுமாரன்

காஷ்மீர் கட்டுக்கு அடங்காத நிலையை அடைந்துவிட்டது என்பதை இந்திய அரசையும், அதன் ஊதுகுழல்களான வானொலி, தொலைக்காட்சியைத் தவிர ஏனைய எல்லாத் தரப்பினருமே ஏற்றுக்கொள்கிறார்கள். இந்திய அரசின் நிருவாகம் என்பது அங்கு பெயரளவில்தான் நிலவுகின்றது என்பதை காலம் காலமாக ஆளும் அதிகாரத்தைக் கையிலே வைத்திருந்து தடித்துப்போன இந்திய மேட்டுக்குடி வருக்கத்தைத் தவிர ஏனையோர் எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள் இதுவரை காலமும் கண்ணை மூடிக் கொண்டிருந்த உலகமும் அங்கு நடைபெறும் படுபாதக இராணுவ அட்டூழியங்கள் குறித்து கருத்தும் கவலையும் தெரிவிப்பது மட்டுமன்றி கண்டனம் செய்யவும் தொடங்கி விட்டது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் புதையும் தனது மானத்தைக் காப்பாற்ற வழி தேடி அலையும் இந்திய ஆளும் வருக்கம் எதையும் கொடுக்கவும் மனமில்லாமல், விடவும் மனமில்லாமல் செயற்படும் போக்கின் விளைவுகள் விபரீதமாக அமையப் போகின்றன என்பதைச் சருவதேச சஞ்சிகைகள் மட்டுமன்றி இந்திய சஞ்சிகைகளும் மிகத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. இடித்துரைக்கின்றன.

நான்காண்டு கால ஆயுதப் போராட்ட வளர்ச்சி, கடந்த இரு ஆண்டுகளாக இந்திய அரசு கூறி வருவது எவ்வளவு பொய்மை நிறைந்தவை என்பதை அம்பலப்படுத்தி நிற்கின்றது. புதுதில்லி நடுங்கும் கட்டத்தை இவ்வாயுதக் கிளர்ச்சி தோற்றுவித்து விட்டதாக 'இந்தியாடுடே' கூறுகின்றது. இவையெல்லாம் நிச்சயமான உண்மைகள் என்பதை கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் அங்கு அரங்கேறும் நிகழ்ச்சிகள் கண்ணாடி போல பிரதிபலிக்கின்றன. இவ்வளவு காலமும காஷ்மீரில் குடியியல் நிருவாகம் ஏதோ நடப்பதாகக் கூறி அதற்குச் சான்றாக இதுவரை காட்டப்பட்ட காவல் துறை செயற்பாடும் இப்போது முற்றாகசெயலிழந்துவிட்டது. ஏற்கனவே காஷ்மீர் காவல் துறை போராளிகளுக்கு அனுதாபம் காட்டுகின்றதுஎன்பது தெரிந்தாலும் அண்மையில் நியாஸ் அகமது என்கிற காவலர் இராணுவப் பாதுகாப்பில் வதைக்கு உள்ளாகி இறந்தது- காவல் துறைக் கலகமொன்றையே அங்கு உருவாக்கி விட்டது. 2000க்கும் மேற்பட்ட ஆயுதந்தாங்கிய காவல்துறையினர் பெரும் ஆர்ப்பாட்டங்களில் இறங்கி அரச பயங்கரவாதத்திற்கு எதிராக ஐ.நாவிற்கு முறைப்பாடு செய்த அதிசயமும் அங்கு நடந்தது. அது மட்டுமன்றி சிறீநகரில் உள்ள தலைமைக் காவல்பணிமனையை தமது கட்டுப்பாட்டின்கீழ்கொண்டு வந்து பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இந்திய இராணுவமோ ஏப்ரல் 28ஆம் திகதி அதி விடியற்காலை தமது இராணுவ கவச வாகனங்கள் மூலம் கட்டடங்களை தகர்த்து இவர்களை சுற்றி வளைத்து கைது செய்தனர். இத்தோடு காவல் துறையின் செயற்பாடும் முடிவுற்றது. இப்போது கிஸ்புல் முஜாகுதீன் போராளி அமைப்போ. காவலர்களை தன் மானத்துடன் தம்மோடு சேர்ந்து போரிட வருமாறு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது. எனவே இப்போது நிலை மோசமாகி விட்டது, அரச பயங்கரவாதம் உச்சம் நோக்கிச் செல்வதால் இத்தகைய எதிர் விளைவுகள் தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றன. அண்மையில் கூட வெறிகொண்ட இந்திய இராணுவம் 'லால்சௌக்' எனும் சதுக்கப்பகுதியில் பதிலடி கொடுப்பதற்காக 200க்கு மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களையும், 50க்கு மேறபட்ட வீடுகளையும் ஆட்கள் உள் இருக்கும் போது எரியூட்டினர். எரியூட்டப்பட்ட போது மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே தப்ப முடிந்தது. இருவர் இறந்தனர். இத்தகைய சம்பவங்கள் அங்கு நாளாந்த நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன. அரச வன்முறை அங்கு புதிய எல்லைகளைத் தொட்டு விட்டது.

மேலும் மே 11-ம் திகதி நடந்த இன்னுமொரு நிகழ்வு சிவில் நிருவாகத்தை முற்றாக குழப்பியதோடு இநதிய அரசின் முகத்தில் கரிபூசிய நிகழ்வாகியும் விட்டது. அன்று சிறிநகரில் உள்ள அரச தலைமைச் செயலகம் ஏவுகணைத் தாக்குதலுக்குஉள்ளாகிபலத்த சேதம் அடைந்தது. அவசரம் அவசரமாக வெளியேறிய அரசாங்க ஊழியர்கள் இன்னமும் வேலைக்கு திரும்பவேயில்லை. இத் தாக்குதல் மிகத் தீவிரம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இத் தாக்குதலை நடத்திய, காஷ்மீர் தனி நாடாக திகழவேண்டும் என்னும் நோக்கமுடைய ஜே.கே.எல்.எப். (J.K.L.F) எனப்படும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி, அரச பயங்கரவாதத்திற்கு துணை போகும் அரசாங்க ஊழியர்களுக்கு இது கடும் எச்சரிக்கை என்று அறிக்கை வெளியிட்டது.


இவ்வாறாக பல உள்நாட்டில் மட்டுமன்றி வெளியுலக அழுத்தங்களும் இந்தியாமேல் இப்போது அதிகரிக்க தொடங்கி விட்டது. அண்மையில் பாக்கில் கூடிய 53 நாடுகளின் இசுலாமியக் கூட்டமைப்பு காஷ்மீரில் இந்திய இராணுவத்தின் வதைகள், படுகொலைகள், பாலியல் வன்முறைகளை கண்டித்து போராடும் காஷ்மீர் மக்களுக்கு தமது ஆதரவினைத் தெரிவித்துதீர்மானம் நிறைவேற்றியது. இசுலாமிய உலகைப் பொறுத்தவரையில் பொசுனியா,பாலத்தீனம் என்கிற வரிசையில் காஷ்மீரும் இடம்பெறத் தொடங்கிவிட்டது.அமெரிக்க நாடாளுமன்றில் சருவதேச மன்னிப்பு சபை அரங்கில் - எனப் பல சருவதேச அரங்குகளில் கண்டனத்துக்குள்ளாகும் இந்தியா தற்போது காஷ்மீர் விடயத்தில் ஒரு தற்காப்பு நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. இதன் காரணம் பற்றியே அது இப்போது தனது மனிதாபிமான முகத்தை காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

எனவே இப்போது இந்தியா வேறுபட்ட சில தந்திர உத்திகளை கையாளத் தொடங்கியுள்ளது. எனவே காஷ்மீரில் கொடிய வன்முறையை கட்டவீழ்த்து விட்ட முன்னாள் 'றோ' தலைவர்கிரிஷ்சக்சேனா மாற்றப்பட்டு புதிய ஆளுநராக மிதவாதியான ஜெனரல் கிருஷ்ண ராவ் நியமிக்கப்பட்டார். சனநாயக வழிமுறைகளை ஊக்குவிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு போராளிக் குழுக்களின் வேறுபாடுகளை (தமிழீழத்தில் செய்தது போல) கையாள முடியுமா என முயல்கின்றது, பிரதான போராளி அமைப்பான ஜே.கே. எல். எப் பாக்கித்தான் சார்பாக இல்லாமல் இருப்பதால் இதனோடு தொடர்பு கொள்ள முயற்சித்தது. சிறையில் இருக்கும் போராளிகளை மத்திய இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் இரகசியமாக சந்தித்தார். கிஸ்புல் முஜாகுதீன் இயக்கத்திற்குஎதிராக இதனை பயன்படுத்த விரும்பிய அவர் பெருமளவு பணமும், ஆயுதங்களும், தருவதாகவும் தேர்தலில பங்குபற்றுமாறும் அவ் இயக்கத்தைக் கேட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி சதிககுப் பலியாக வில்லை. காஷ்மீரில் ஒரு தேர்தல் தான் நடக்க முடியும். அது விடுதலைக்காக மட்டுமே இருக்கும், என்று ஜே.கே. எல் எப். மிகத் தெளிவாகக் கூறியது. இந்திய அரசோடு பேச்சுவார்த்தை நடாத்தியமைக்காக முக்கிய காஷ்மீர் தலைவர் ஒருவர் அண்மையில் படுகொலையானார். இவ்வாறாக வெகுமதி அளித்து சனநாயக நீரோட்டத்தில் போராளிகளை தள்ளும் முயற்சியும் வீணாகவே, இப்போது என்ன செய்வது என இந்தியா தத்தளிக்கின்றது.

ஆனால் இதே சமயம் காஷ்மீர் போராட்ட நிலையோ, தரத்திலும், அளவிலும் பெரும் வளர்ச்சி கண்டு வருகிறது. மக்களின் மனவுறுதி வியத்தகும் வகையில் அதிகரிக்கின்றது இம் மக்கள் இப்போது இந்திய அரசுக்கு வரி செலுத்துவதில்லை. இந்திய அரசு என்ற ஒன்று இருப்பதாகவே அவர்கள்காட்டிக்கொள்வதுஇல்லை போராளிகளோ தேவையான சகல நவீன ஆயுதங்களையும், பெற்றுக் கையிருப்பில் வைத்துக் கொள்கிறார்கள். ஆப்கான் போராளி அமைப்புகளின் திறமைமிக்க போராளிகள் பலரையும் இப்போது காஷ்மீரில் காணமுடியும். முதல் தடவையாக அங்கும் விடுவிக்கப்பட்ட பகுதிகள் உருவாகி விட்டன. சபோர், நாகின், அனந்தநாக், வெரிநாக் என்கின்ற மாவட்டங்களின் பல பகுதிகளை ''இந்திய நாய்களிடமிருந்து'' விடுவித்து விட்டதாக கிஸ்புல் முஜாகுதீன்அறிவிப்பு உண்மையானதே என்பதை இந்திய அதிகாரிகள் ஒப்புக்கொள்கிறார்கள்.

இவற்றைவிட அண்மையில் சிறிநகரில்இரு முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படக்கூடிய இரு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. முதலாவதாக பெரிதும் வேறுபட்டிருந்த பாக்கிததான் சார்பான கிஸ்புல் குழுவும், ஜே. கே எல். எப். குழுவும் தமக்கிடையே வீண் மோதல்களை தவிர்க்க உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டமை பிரதானமான தமது சக்தியை உட்கட்சி சண்டைகளில் செலவழிப்பதில்லை யென இவர்கள் முடிவு எடுத்துள்ளனர். இரண்டாவதாக காஷ்மீரின் சகல தரப்பினரையும் இரு பிரதான போராளிக் குழுக்களையும் உள்ளடக்கிய 32கட்சிக் கூட்டணி விடுதலைக்கான சருவகட்சி மாநாடு என்கிற பெயரில இணைந்தமை. 19வயதேயான மௌலவி ஓமர் பாரூக் என்கிற ஆன்மீகத் தலைவர் இவர்களை எல்லாம் ஒன்றுபடுத்தும் வல்லமையுள்ளவராகத் தோற்றுகின்றார். எனவே இத்தகைய மாற்றமும், காஷ்மீர் மக்களின் விடுதலையின் இன்னொரு பரிமாணமாக இப்போது அமைகின்றது.

இத்தகையதொரு பாரிய பிரச்சினையை மக்களின் மன உணர்வுகளைபுரியவிரும்பாமல் கூடிய தன்னாட்சி வழங்கவும் முயலாமல் வெறுமனே இராணுவ அடக்குமுறையை நம்பி காலம் கழிக்கும் உண்மையான தில்லியின் ஆட்சியாளர்களான ஆளும் மேட்டுக்குடி பார்ப்பனிய வருக்கத்தின் அகந்தையும், ஆணவமும் வெறும் முடத்தனம் நிரம்பியது என்பது இப்போது படிப்படியாக வெளிப்படுகின்றது. இந்திய இராணுவத்தை நம்பியே இவர்களின் ஆட்சிநடைபெறுகின்றது. இதனால்தான் இன்று மொத்த இராணுவத்திற்கான பாதுகாப்புசெலவில் 15 சதவிகிதம் காஷ்மீரிலேயே செலவாகின்றது. பஞ்சாப், காஷ்மீர் மற்றும் அசாம், திரிபுரா. மணிப்பூர் போன்ற வடகிழக்கு மாநிலங்களில் 40 வீதத்திற்கும் மேலான இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். ஓய்வு ஒழிச்சல் இல்லாது தாம் பயன்படுத்தப்படுவதை இந்திய இராணுவமே பெரிதும் விரும்பாத நிலை தமிழீழத்தின் தேசியத்தை சிதைக்க முயன்ற அதே வருக்கம் இன்று அதே முறையில் காஷ்மீரின் தேசியத்தை நசுக்க முயல்கிறது. பெரும் ஊழல் மலிந்ததும் அதே சமயம் தண்டனைக்கு தாம் அப்பாற்பட்டவர்கள் என எண்ணி மிதப்பில் இருக்கும் இச்சிறு மேட்டுக்குடி வருக்கம் தனது நலன்களை காப்பாற்ற எப்போதும் கடுமையாக முயல்வதாகவும் இதன் வெளிப்பாடாகவே போபர்ஸ் ஊழலில் இருந்து இன்றைய பங்குசந்தை ஊழல் வரை வெளிவந்தும் எவரும் தண்டிக்கப்பட முடியாத நிலை என பிரபல அரசியல் விமர்சகர் மனோஜ் ஜோசி குறிப்பிடுகிறார். இத்தகையதொரு சிறுஆளும் வருக்கமே முன்னர் சோவியத்தில் இருந்தும் அதன் பயனாக சோவியத்திற்கு என்ன நடந்தது என்பதுமான வரலாறுகள் மீண்டும் இந்தியாவில் அரங்கேறக் கூடும் என்கின்ற அச்சமே இந்தியாவில் தோன்றுகிறது. இக்கட்டுரை முடியுந்தறுவாயில்மீண்டும் தலைமைச் செயலகம் இரண்டாம் முறையாக ஏவுகணைத் தாக்குதலுக்குட்படுத்தப்பட்டது பற்றிய செய்தி வெளிவந்துள்ளது.




ரேஸ்ரியின் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுவதற்கான நிபந்தனைகள்:-

பியர், ஜாம் அல்லது கோடியல் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் அதற்குரிய அதிர்ஷ்டலாப சீட்டையும் பெற்றுக்கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

1 ஆம் பரிசு – சுவர்க்கடிகாரம்
2 ஆம் பரிசு – எவர் சில்வர் வீட்டுப் பாவனைப்பொருள்கள்.
3 ஆம் பரிசு - மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்.

மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்

போத்தல்கள் ஒப்படைக்கவேண்டிய இடங்கள்:-

(1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம் (2) அறிவகம்-சாவகச்சேரி (3)சுபாஸ் பேக்கவுஸ்-நெல்லியடி (4)பேரம்பலம் அன்சன்ஸ் சுன்னாகம் (5) சித்தி விநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு (6) சபாரிஸ் சுண்டுக்குளி (7) நீதினி Q சுன்னாகம் (8) செ. சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு மானிப்பாய் (9) ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தை சந்தி வட்டுக்கோட்டை (10) இ. இராசதுரை பத்திரிகை விற்பனை நிலையம் இருபாலை சந்தி. (11) விஸ்கம் கூல் பார் மானிப்பாய். (12) கந்தசாமி அன்சன், சங்கானை.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6768)

# வளைகுடாப்போர்; வெற்றியை நிர்ணயித்த

# அமெரிக்காவின் அதிரடிப்படைப் பிரிவுகள்

வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கப் படைகள் தாக்குதலை ஆரம்பிப்பதற்கு சில வாரங்கள் முன்பாக ஒருநாள் ஈராக்கிய சிறுமி ஒருத்தி மணல் நிறைந்த மேட்டுப் பகுதியில் சென்றுகொண்டிருக்கின்றாள். திடீரென அவளின் கண்ணில் தரையில் ஏதோ வித்தியாசமான அமைப்பு தென்படுகிறது. அருகில் சென்றவள் அதைத் தூக்கினாள். உள்ளே காணப்பட்ட குழியினுள் மூன்று மனிதர்கள் துப்பாக்கிகளுடன். அவர்கள் மனிதர்களா அல்லது வேறு ஏதும் பிராணிகளா என்று அவளுக்குச் சிறிதுநேரம் புரியவில்லை. உருமறைப்பு செய்யப்பட்ட அவர்களது உடைகள், வெவ்வேறு கடும் நிறங்கள் பூசப்பட்ட முகங்கள். சிறுமியைக் கண்டதும் அவர்களது 9 எம். எம். துப்பாக்கிகள் அவளை நோக்கிக் குறி வைத்தன. எனினும் சிறுமிதானே என்று அவளை அவர்கள் விட்டுவிட்டனர்.

பீதியடைந்த சிறுமி தனது தந்தையிடம ஓடிச் சென்று கண்டதை விபரித்தாள். அவர் ஈராக்கிய படைகளிடம் விபரத்தை கூறினார். அம் மலைப் பகுதி ஈராக்கியப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டது. குழியினுள் மறைந்திருந்த அந்த மூன்று நபர்களுக்கும் ஈராக்கியப் படைகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை ஆரம்பிக்கிறது. மூவரில் ஒருவர் இடையிடையே தனது தொலைதொடர்புக் கருவி மூலம் உதவி கோரி தகவல் அனுப்பியபடி இருந்தார். மோதல் நீடித்தது.

திடீரென அப்பகுதிக்கு எம். எச். 60 பிளக் ஹவாக் ரக உலங்குவானூர்தி ஒன்று மணிக்கு 160 மைல் வேகத்தில் வந்து சேர்ந்தது. ஈராக்கியப் படைகளும் அந்த மூன்று நபர்களும போரிட்டுக் கொண்டிருநத பகுதியின் இடையே கல்ஒன்று வீழ்ந்தது போல் அந்த உலங்குவானூர்தி திடீரெனத் தாழ்ந்தது. அம்மூவரும அதில் விரைந்து தாவி ஏறிக் கொண்டனர். ஈராக்கியபடையினரின் மூன்று வேட்டுகள் உலங்குவானூர்தியைத் தாக்கியபோதிலும் அது திடீரென மேலெழும்பி விண்ணில் மறைந்து விடடது. அனைத்தும் நடந்து முடிந்தது சில நிமிடங்களில்.

மேற்கூறிய சம்பவம் திரைப் படங்களில் வந்த காட்சிகளல்ல. வளைகுடா யுத்தம் ஆரம்பிக்க முன் ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைத் தளங்களை அழிக்க ஈராக்கினுள் இரகசியமாக இறக்கி விடப்பட்ட அமெரிக்க இராணுவ விசேட அதிரடிப்படையான 'பச்சை பெரட்' (Green Berets) பிரிவைச் சேர்ந்தவர்களே இம் மூவரும். இவ்வாறு இப்பிரிவினர் ஈராக்கின் பல இடங்களிலும் மணலின் கீழ் மறைவாக இருந்து தமது பணிகளை செவ்வனே செய்து முடித்தனர்.

வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிரான அமெரிக்காவின் 'பாலைவனப் புயல்' இராணுவ நடவடிக்கை அமெரிக்காவிற்குச் சாதகமாக அமைந்தமைக்கு நவீன தொழில் நுட்ப படைக்கலன்களும், சாதனங்களுமே காரணம் என இதுவரை இராணுவ ஆய்வாளர்களால் கணிக்கப்பட்டு வந்தது. இது ஓரளவிற்கு உண்மையாக இருப்பினும், போர் வெற்றியைப் பெற்றுத் தந்தமைக்கு வெளியில் அறியப்படாத மனித முயற்சியும் பயன்படுத்தப்பட்டுத்தான் உள்ளது. இவைதான் அமெரிக்கப் படைகளின் இரகசியமாக இயங்கும் விசேட நடவடிக்கைகளுக்கான அதிரடிப் படைகள்.

புளோரிடா மாநிலத்தில் தலைமையகம் அமைந்துள்ள இந்த விசேட படையின் 'பாலைவனப் புயல்' இராணுவ நடவடிக்கையின் பங்கு குறித்து இதுவரை இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. ஆனால் போரின் வெற்றியைத் தீர்மானித்த இவர்களது பணி குறித்தும், இவர்களது செயற்பாடு குறித்தும் பத்திரிகையாளர்கள் பல தகவல்களை வெளி உலகிற்குக் கொண்டு வந்தனர்.

### விசேட நடவடிக்கைக் குழுக்கள் (Special Operations Forces)

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் ரம்பா (Tampa) எனும் பகுதியில் இந்த விசேட படையினரின் தலைமையகம் அமைந்துள்ளது. இப்பிரிவில் சுமார் 45,000 பேர் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தின் விசேட படைப்பிரிவு வடகரோலினா பகுதியில் அமைந்துள்ளது இப்பிரிவில் 30,000 படையினர் உள்ளனர். இப்பிரிவில் பச்சை பெரட் (Beret) ரேஞ்சர்ஸ் ஆகிய உப பிரிவுகளும் விரைவு தாக்குதல் உலங்கு வானூர்தி ரெஜிமென்டும், உளவியல மற்றும் சிவில் நிர்வாக நிபுணர்களும் அடங்கியுள்ளனர்.

கடற்படையின்விசேடபடை கலிபோர்னியாவில் அமைந்துள்ளது. 4,000 படையினர் உள்ளனர். கடற்படையின் கடல், தரை, ஆகாய பிரிவு அதிரடிப்படையினரைக் கொண்டுள்ளதால் இப்பிரிவு 'சீல்' (SEAL - SeaAir Land Commandos) என அழைக்கப்படுகறது. விசேட படகுப்பிரிவுகள் கடல்வழியாக தரையிறங்கும் நடவடிக்கையின் போது விநியோகம் மற்றும் தாக்குதல் சாதனப் பிரிவுகள் என்பவற்றை இப்பிரிவுகொண்டிருக்கிறது.

விமானப்படையின் விசேட படை புளோரிடா ஹேர்பேட் விமானத்தளத்தில் அமைந்துள்ளது. 9,000படையினரைக் கொண்ட இந்த பிரிவு வான் வெளி ஊடுருவல் வான் மூலமான பாதுகாப்பு வழங்கும் பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

முப்படைகளினதும் அதிரடிப்படை (Joint Service) கடற்படையின் 6 ஆம் 'சீல்' குழுவையும் இராணுவத்தின் ஒரு விசேட பிரிவையும் (இப்பிரிவின் விபரம் இன்னமும் இரகசியமாகவே வைக்கப் பட்டுள்ளது) கொண்டது. இப்பிரிவில் 1,300 படையினர் உள்ளனர்.

### வளைகுடாவில்.....

ஈராக்கின ஆகாய பாதுகாபபு குறித்து அறிய உளவு விண்கலங்களும், வேவு விமானங்களும் மாதக் கணக்காக ஈராக்கை சுறறிச் சுற்றி வந்தன. இவற்றின 'கண்களில' ஈராக் வான எதிர்ப்பு நடவடிக்கை எவ்வாறு முன்னேற்பாடு செய்யப் பட்டுள்ளது என்பதுபிடிபடுவதாகஇல்லை. இது வளைகுடாவில் ஈராக் மீதான படைநடவடிக்கைக்கு தலைமை தாங்கிய அமெரிக்க இராணுவ தளபதி ஜெனரல் நோர்மன்ஸ்குவார்கபோவிற்கு பெரும் தலையிடியாக அமைந்திருந்தது. அமெரிக்க மற்றும் நேச நாட்டு விமானங்கள் தாக்குதலை ஆரம்பிக்க முன் ஈராக்கின் எதிர்ப்பு நடவடிக்கை என்ன என்பதை அறியவேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டிருந்தது. சதாம் குசைனின் ரேடார் எச்சரிப்பு நிலையங்களை பரவலாக அமைத்திருந்தமை முக்கிய பிரச்சனையாக இருந்தது. இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள விமானத் தாக்குதலில் நேச நாட்டுப்படைகள் நூற்றுக் கணக்கில் விமானங்களை இழக்கப்போகின்றது என ஸ்குவார்கபோவ் கணக்கிட்டார்.

### விமானப்படையின் அதிரடிப்பிரிவு:

இவ்வேளையில்தான் அவரை விமானப்படையின் அதிரடிப்பிரிவு தலைவர் கேணல்ஜோர்ஜ் கிரே சந்தித்து தமது பிரிவால ஈராக்கின் விமான எதிர்ப்பு சக்தியை முறிக்க முடியும் என உறுதி வழங்கினார். சிறிது நேர அமைதியின் பின் ஜெனரல் ஸ்குவார்கபோவ் "உம்மால் நூறு சதவீதம் வெற்றி பெற முடியும் என எனக்கு உறுதிதர முடியுமா?" என திடீரென கேட்டாராம். நெற்றியில் வியர்வை வழிய 'முடியும்' என்று கூறி அமைதியானாராம் கேணல் கிரே. தொடர்ந்து தனது திட்டத்தை கிரே படைத் தளபதி ஸ்குவார்கபோவிற்கு விபரித்தார். திட்டத்தை நிறைவேற்ற தவறினால் நேசநாட்டுப் படைகளின் விமானங்கள் ஈராக்கினால் குருவிகள் போல் சுட்டுவீழ்த்தப்படக் கூடிய அபாய நிலை. ஈராக்கின் ரேடார் எச்சரிப்பு நிலைகளை அழிக்க விமானப்படை அதிரடிபபடையின் எம். எச் - 53 தாழப்பறந்து தாக்கும் உலங்கு வானூர்திகளும், அபாசே உலஙகு வானூர்திகளும், இரவோடு இரவாக பாலைவனத்தின்மணலோடு மணலாக மிகவும்உயரம்குறைந்தமட்டத்தில் (ரேடாரிலிருந்து தப்பிக் கொள்ள) ஈராக்கை நோக்கி விரைந்தன. 1991 ஜனவரி மாதம் 17ஆம் திகதி அதிகாலை. வளைகுடா நேரப்படி அதிகாலை 2.20 மணிக்கு உலங்கு வானூர்திகள் ஈராக் எல்லையை அண்மிததன. இவை இரண்டு பிரிவாக வெவ்வேறு திசையில் பிரிந்து ஈராக்கினுள் நுழைந்தன ஈராக்கின் சில ரேடார் நிலையங்கள் இலத்திரனியல் முறையில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தப்படடிருந்தன. இவற்றில் ஒன்று தாக்கப்பட்டால் கூட மற்றைய ரேடார் நிலையம் ஈராக்கிய படைகளை எச்சரித்து விடக்கூடிய நிலை. இதனால் அவற்றை ஒரே சமயத்தில் தாக்குவதே இப்பிரிவின் திட்டமாக இருந்தது.

ஒரு ஈராக்கிய வீரனால் கைத்துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தக் கூடிய நிலையில் தாழ்வாக சென்ற இந்த உலங்கு வானூர்திகளில் அபாசே ரக உலங்குவானூர்திகள்தமது இலக்குகளை நோக்கி ஏவுகணைகளை செலுத்தின. லேசர் மூலம் இயங்கும் ஏவுகணைகள் ரேடார் நிலையங்களை நெருப்பு பந்துகளாக மாற்றின. தாக்குதல் நடத்த திட்டமிட்டதற்கு இரு செக்கன்கள் முன்பாகவே தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து செக்கன்களில் பணி பூர்த்தியானது. தாக்குதல் வெற்றிகரமாக பூர்த்தியானதாக தாக்குதலுக்கு தலைமை தாங்கிச் சென்ற விமானப்படை அதிரடிப்படைப்பிரிவின் மேஜர் லினோக் "கலிபோர்னியா" என்ற குறியீட்டு வார்த்தை மூலம் ஜெனரல் குவார் கபோவிற்கு அறிவித்தார். தொடர்ந்து பாக்தாத் மீது தாக்குதலை நடத்த நேசநாட்டுப் படைகளின் போர் விமானங்கள் அடுத்தடுத்து கிளம்பின. முதல் நாள் தாக்குதலில் எந்த ஓர் எதிர்ப்பும் இன்றி விமான இழப்பும் இன்றி அவை தளங்களுக்கு திரும்பின.

### கடற்படையின் "சீல்" அதிரடி:

1991பெப்ரவரி 23-நேசநாட்டுப் படைகள் தரைத்தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முதல் நாள் தரைவழியாக ஈராக்கினுள்ளும், குவைத்தினுள்ளும் நுழைவதற்கு முன் இப்பகுதியில் உள்ள ஈராக்கிய படைகளின் கவனத்தை திசை திருப்ப வேண்டிய நிலை. படைநகர்வு குவைத் கடற்கரை வழியாகவே நடத்தப்பட போவதாக ஈராக்கியரை ஏமாற்ற வேண்டும். திடீரென குவைத் கடலின் அடிவானத்தில் அமெரிக்க மற்றும் அதன் நேச நாட்டுப் படைகளின் கப்பல் கள் தோன்றுகின்றன. கப்பலில் இருந்து தரைவழியாக படைகளைநகர்த்தப்போவதற்கான போலியான போர் ஏற்பாடுகள் கரையிலிருந்த ஈராக்கியர்களுக்கு நடத்தி காண்பிக்கப் படுகிறது.

இந் நிலையில்தான் அன்றிரவு 10 மணியளவில் லெப். ரொம் டயிற்ஸ் தலைமையிலான வெறும் ஐந்தே ஐந்து 'சீல்' கடறபடை நீச்சல் அதிரடிப்படையினர் சிறு படகு மூலம் சவூதி கரையிலிருந்து குவைத் நோக்கி புறபட்டனர். இதற்கு முன்னரும் கடற்படையினரின் சீல்' படையினர் இரகசியமாக குவைத் கடற்கரையோரம் வந்து ஆராய்ந்து பார்தது கடற்கரையில் கால்வைக்க முடியாத அளவு கண்ணிவெடிகள் இருந்ததைக் கண்டு கடல் வழி தரையிறக்கம் கடினம் என்று கண்டறிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது இந்தஐந்து 'சீல்' படையினரும் குவைத் கரையில் இருளின் துணையுடன் வந்தடைந்து விட்டனர். கைகளில் 20 கிலோ சி-4 ரக வெடிமருந்து பொதிகள் ஒரு மணி நேரத்தின் பின் வெடிக்க கூடியதாக அவை கடற்கரை மணலில் வைக்கப்பட்டன. லெப். டயிற்ஸ் இரவுப் பார்வைக் கண்ணாடியால் கரையில் பதுங்குகுழிகளில் ஈராக்கிய படைகளின் நடமாட்டத்தை அவதானித்தார். இவர்களிடமிருந்த சிறு துப்பாக்கிகள், கரையில் ஆவலுடன் காத்திருக்கும் ஈராக்கிய இயந்திரத் துப்பாக்கிக்கு எவ்விதத்திலும் ஈடுகொடுக்காது. ஒவ்வொரு நகர்வையும் மெதுவாகவே மேற்கொண்ட 'சீல்' படையினர் கடலினுள் மீண்டும் சென்று சில மைல் நீந்தி இறுதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த படகில் ஏறிக் கொண்டனர். கரையில் வைக்கப்பட்டிருந்த சி-4 வெடிமருந்துகள் அதிகாலை ஒரு மணிக்கு பாரிய சத்தத்துடன் வெடிக்க ஆரம்பிக்கின்றன. கரையிலிருந்த ஈராக்கியர், நேசநாட்டுப்படைகள் கடல் வழியாக தரையிறங்குவதாக எண்ணி கடற்கரையின் 'வெறும்' வெண்மணலை நோக்கி தமது 50 கலிபர் துப்பாக்கிகளை இயக்குகின்றனர். எறிகணை வீச்சும் நடக்கிறது. எல்லைகளில் நின்ற ஈராக்கிய படைகளின் இரு பிரிவுகள் கடற்கரைப் பகுதியை நோக்கி விரைந்து நகர்த்தப்படுகின்றன. இதையே வாய்ப்பாகக் கொண்டு நேசநாட்டுப்படைகள் தரைவழியாக ஆரம்பத்தில் பெரும் எதிர்ப்பும் இன்றி குவைத், ஈராக் எல்லைகளை கடந்து உள்ளே நுழைந்தன.

### இராணுவத்தின் அதிரடிப்பிரிவு:

இஸ்ரேல் மீது அடுத்தடுத்து ஸ்கட் ஏவுகணைகளை செலுத்தி இஸ்ரேலை வலுக்கட்டாயமாக போரிற்கு இழுக்கும் முயற்சியில் ஈராக் ஈடுபட்டிருந்தது. போரில் இஸ்ரேல் கலப்பதை விரும்பாத அமெரிக்கா அதற்காக ஈராக்கின் ஸ்கட் தளங்களை அழிக்க விரும்பியது. இதற்காக ஈராக்கினுள் சில படைப்பிரிவுகளை அனுப்பமுன் உலங்குவானூர்திகள் மூலம் ஆறு பேரைக் கொண்ட ஏ-டீம் எனும் விசேடபிரிவு ஒன்று தென் ஈராக் மணல் வெளியில் இரகசியமாக இறக்கப்பட்டது. இவர்கள் அப்பகுதி மணல் மாதிரிகளை சேகரித்துக் கொண்டு சவுதி அரேபியா மீண்டனர். இம்மணல் மாதிரிகளைக் கொண்டு இராணுவ அதிரடிப்படைகளை எங்கெங்கு இறக்கலாம், எப்பகுதிகளில் அவர்கள் தரையின் கீழ் பதுங்கியிருக்கலாம் என ஆராயப்பட்டது. இதைத் தொடர்ந்து பகுதி பகுதியாக பச்சை பெரட் எனும் அதிரடிப்படையினர் ஈராக்கினுள் இரகசியமாக உலங்கு வானூர்திகள் மூலம் இறக்கப்பட்டனர். இவர்கள் தமது இலக்கை நோக்கி நகரமுன் குழிகளை வெட்டி மணலின் அடியில் தங்கியிருந்தனர். (வியட்நாமில் வியட்கொங் போராளிகள் கையாண்ட தரையடி வாழ்விடங்களை இப்போது அமெரிக்கர் பின்பற்றினர்.) ஈராக்கின் ஸ்கட் தளங்களை அடையாளம் கண்டு இவர்கள் இடங்களை சங்கேத குறிகள் மூலம் அறிவிக்க அமெரிக்க விமானப் படை குண்டுவீச்சு விமானங்கள் அவ்விலக்குகளை தாக்கின. இவ்வாறு 26க்கும் மேற்பட்ட ஸ்கட் தளங்கள் அழிக்கப்பட்டதாக பென்டகன் அறிவித்தது. இப்பணியில் சில அதிரடிப்படையினர் கொல்லப்பட்டும் கைது செய்யப்பட்டும் உள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### அதிரடிப்படை நடவடிக்கை மூலம்.....

அமெரிக்கப் படைகள் இவ்வாறு தமது முப்படைகளினதும் இரகசிய அதிரடிப்படை பிரிவுகளை ஈடுபடுத்தியதன் மூலம் பெற்ற வாய்ப்புக்களை பின்வருமாறு கூறலாம் கிரேயின் அதிரடிப்படை (விமானப்படை) உலங்குவானூர்திகள் ரேடார் நிலைகளை அழி

(09 பக்கம் பார்க்க)

**துஷ்யந்தன்**

## சிறுகதை

# ஆனாலும்....

**செ. பொ. சிவனேசு**

பழிக்குப் பழியா? ... அதிர்வு; திகைப்பு. சராசரி வார்த்தைகள். ஆனால், கந்தகத்தை அடைத்து, காதருகே வெடிக்கவைத்தது போல......

உண்மையாத்தான் கேட்டவனோ? ...... பவுடிக்குத்தான் ......

மிதித்தபடியே; வண்டி ஓடியபடியே,

''என்னப்பா? ... ... எங்கெ பாத்துக்கொண்டு ஓடுறாய்?''

திடுக்குற்று, மிதிவண்டிக்கு வந்து— எட, குழுக்கா விட்டிட்டன்! பின்னாலே வந்தது களைக் கவனிக்காமல் ... ... கோதாரி ...... எத்தினைதரம் முயற்சிபண் ...... இந்தமூளையை நிதானத்துக்குக் கொண்டுவாறதெண்டா ...... மூளையென்ன தேன்கூடே? மண்டைக்கையே யோசினையால் சுழண்டு சுழண்டு ...... ஈயள்மாதிரி ...... மொய்ச்சுக் கொண்டு! ... ... அவன் ... ... உண்மையிலயே பவுடிக்குத்தான் ...... சசீ, குத்தல் மாதிரியெல்லோ? ... ... குத்தல் கதையள் கதைக்கிறவனில்லையே? ... ... எண்டாலும் ... ... ... ... எல்லா நேரமும் ஒரே மாதிரியே ... ... ஆனா ......

திருமணத்திற்கு வந்திருந்தான், அவன் கையிலும் கடித உறை தருகிறபோது காதருகில் உதடுகள்.

''இதைத் தனியா உடைச்சுப் பார்.''

உடைத்தால் கடிதம், 'நண்பா' எனது நிலைமை உனக்கு விளங்கும். இப்போது கையில் காசில்லை நீயுமோ, மாதக் கடைசியாய்ப் பாத்து கல்யாணத்தை வைத்திருக்கிறாய் ......'

எட, நான் எங்கே வெச்சனான்? பெரீசுகளெல்லோ வெச்சதுகள்! இது தப்பினால் பேந்து முகூர்த்தமில்லையாம். அடுத்த வருசந்தானாம் ...... கோதாரீல போன முகூர்த்தம்! ...... மனிதனுக்குக் கையில, மடியில நிறைஞ்சிருக்கிற நேரமெல்லோ முகூர்த்த நேரம்?

'...... எனக்குத் தரவேண்டியிருக்கல்லவா நூற்றைம்பது? தரவேண்டாம், திருமணப் பரிசாக வைத்துக்கொள்.'

பிறகு அவனது ......

நெருங்கிவிட்டது, ஒரு கிழமை, கையிலோ இரேகைகள் மட்டுந்தான், சோதிடன் தந்த அவகாச நம்பிக்கையுடன்.

ஆம் ...... நாளிருக்குத் தானே? அந்த நேரத்துக்குப் பாப்பம்,படைச்சவன் படியளப்பான் ...... ச்சீ, அதென்னெண்டு? ...... எந்த முயற்சியுமில்லாமல்? ...... வந்தென்ன குதிக்குமே? ......இதென்ன சோம்பேறித்தனமப்பா? நடுத்தர வர்க்கங்களுக்குப் பிடிச்சநோய் போலே? ......

வந்தாயிற்று —

கடைசிக் கருந்திரை. கதிரவன் கிழித்தெறிந்தாற் திருமணம். கிழிந்து பொட்டுக் கேடு வெளிக்குமோ? தூக்கமில்லை. மண்டைக்குள் ஒரே குடைச்சல் ..ஆரிட்டப்போய்க் கேக்கிறது? நீட்டாத இடமெல்லாம் நீட்டியாச்சு! சகோதரங்களிட்டெப் போகலாமெண்டா, அதுகளுக்கும் இதே நிலை, அப்பர், அம்மாட்டையோ? ...... ஐயோ ......

''இருந்த இடத்திலயிருந்து அசைஞ்யலாம கிடக்கிறம்!— எங்களிட்டையே? ... ... நீயெல்லோ பாக்கவேணும்? நாங்கள் உன்னைப் பாக்கவேண்டிக் கிடக்கு!''

...... மனிசியின்ரெ ஆக்களிட்டையெண்டா ...... சொல்லத்தேவையில்லை ...... பல்லுக்குப்பதம் ...... குசுகுசுப்பு ......

''சீதனமாத் தாரைவாத்துப்போட்டு ... ... குடும்பத்தையும் நாங்களே பாக்கவேணும்?''

...... இழுத்துக் கொண்டல்லோ போகவேணும்? ...... கடன் பூதத்தைக் ...... கீறியெல்லோ காட்டவேணும்?... பாருங்கோ, தந்த சீதனம் ரத்தமாச்சுவறிக்கிடக்கிறதே! ...... சரி ...... இல்ல என்ன செய்யிற? ...... என்ன வாழ்க்கையப்பா இது! ......என்னத்துக்குத்தான் இந்தக் கலியாணக் கோதாரியள் வந்துதுலைக்குதோ! .. ... ச்சீ, இதென்ன இது?......வாழ்க்கையெண்டா கல்யாணம் வராமலே? ......

சரி ...... துலையுது ஏன் இந்தச் சம்பிரதாயச் சனியனெ? அன்பளிப்பு ...... .. சீ ......வேணுந்தானே? கலியாணமெண்டாஎத்தினைசெலவு! ஆராரிட்டே, எத்தனை எத்தனை வட்டிக்கோ! ஈடுசெய்யத்தேவைதானே? ஒட்டுமொத்தமாக சேந்து அவன்ர நெருக்கடியைத் தீர்க்கும். குடுக்கிறவைக்குந் தோற்றாது— சின்னன் சின்னனாத்தானே? ...... தோற்றாதோ? இல்ல நான் படுகிற பாடென்ன?— இது தேவையில்லாத ஆடம்பரம்! முந்திக்காலத்திலே தேவைப்பட்டிருக்கலாம். நவீன வசதியள் இல்லை — ஊர் உறவெண்டு கூட்டத்தான் வேணும்; இன்னாரும் இன்னாரும் வாழ்க்கைப் பந்தத்தில இணையினமெண்டதுக்குச் சாட்சி, இப்ப பதிவு இருக்கு. கச்சேரியில போய்ப் பதியிறது அலுவல் முடிஞ்சுது. அதெ விட்டிட்டுத் தேவையில்லாத எடுபாடுகள்! காலத்துக்கு ஏற்றபடி மாறவேண்டாமே? ... ...

—... எட, என்ன திடீரெண்டு புரட்சிகரமான யோசினையள்? ...... அப்ப ஏன் வரேல்லே;...... என்ர கலியாணத்தை மட்டும் பெரிசா ...... ஆற்றையேன் சங்கதிக்குத்தான் ...... எனக்கு நெருக்கடி எண்ட உடனே வேதாந்தம்!

......சீசாய்...... இப்பஎன்ன செய்யிறது?...... போகாமலும் விடேலாது. போகில் வெறுங்கையோடெ ? ... .. எட, பாரன் நிலமையெ! தேவையாத் தொடங்கி, சம்பிரதாயமா மாறி, இல்ல...... கௌரவப் பிரச்சினையா...... ச்சைக் ...... இந்தப் போலிக் கௌரவந்தானே மனிசன்ர வாழ்க்கையைச் சீரழிக்குது! ...

... ம்ம் ...... பிறகும் பார், புரட்சிகரமா ......

...... போகுது, இப்ப வழியென்ன?...... ஆங் ...... மனிசியிட்டே ஏதாவது?...... சிக்கனம் பிடிச்சுக் கிடிச்சு? ...... சீ ...... இருந்தா இப்ப ஏனிந்தச் சண்டெ? ...... அங்கெ...... மூஞ்சையெத் திருப்பிக் கொண்டு கிடக்குது ... .. நான் இப்பிடிக் கொதிச்சிருக்கக் கூடாது! ஞாபகம் தானே ஊட்டினது?...... ஏன்தான்கத்தினன்! ...

''ஏனப்பா முதலே சொல்லேல்லை?''

''எத்தினை தரம்சொல்லிப் போட்டன்?''

''அதுக்கேன்டிகத்துறாய்?''

''கத்தாமல்? ... ... கலியாணத்துக்குச் சொன்னதிலயிருந்து புலம்பிக்கொண்டுதானே இருக்கிறன், காசு காசெண்டு!''

''இன்னுமாடா விழிப்பு' ... சாமக்கோழி கேட்டுவைக்கிற வரை மண்டைக்குழப்பம். கிடைக்கவே கிடைத்தாயிற்று வழி. ஒரு காயிதம், நல்லது. குறை நினைக்க இடமில்லை ... அவன் காட்டித் தந்தது தானே?... நண்பா, மன்னித்துக்கொள், இப்போது மிக வசதியீனம், விளங்குந்தானே? கைமாற்றாய் வாங்கியதாக நினைத்துக்கொள், வசதிப்படும்போது தருகிறேன்.'

''என்ன மச்சான், பழிக்குப் பழியா?''...

அலுவலகத்தில் நண்பன்.

''உன்ர கலியாணத்துக்குத் தந்தன், அதேமாதிரித் தந்திருக்கிறாய போலே?''...

குரோதமின்றி, வெனேரென்று புன்னகையுடன், மிகச் சாதாரணமாகவே.

ஆனாலும்,

அதிர்வு; திகைப்பு.




(சி-6882)

## ஆரோக்கிய ஆய்வு

கிலர்ஜ பல்சேர் டோனோமீட்டர் என்பது மனிதனின் உடல் நலத்தை ஆயும் நவீன மருத்துவக் கருவிகளில் ஒன்று. மனிதனின் பார்வைத்தன்மைக்கு உள்ள அழுத்தத்தையும் குளோகோமா வியாதியின் தன்மையையும் சில விநாடிகளில் கண்டுபிடிக்கக் கூடியது. சமீப காலம் வரை இதற்குப் பல கருவிகள் தேவைப்பட்டன. இப்போது ஒரு சிறு பெட்டியை முகத்துக்கு நேரே சில விநாடிகள் பிடித்து, உடம்பிலுள்ள- குறிப்பாகத் தலை சம்பந்தமான பெரும்பாலான நோய்களையும் மிக எளிதில் புரிந்து, மனிதனைப் பல நோய்களுக்கு பலியாகாமல் காப்பாற்ற முடிகிறது.

# விளையாட்டில் போதைப் பொருள் பாவனை மனிதனின் சுய முயற்சியைத் தடுப்பதாகும்

இது ஒரு புராணக்கதை தான். ஒரு காலத்தில் அமெரிக்கக் கண்டத்தில் இளைஞன் ஒருவன் வைத்தியரை அணுகி தான் வேகமாக ஓடுவதற்கும் வேடுவர் இனத்திலே சிறந்தவன் என்ற பெயரெடுக்கவும் உதவவேண்டும் என்று கேட்டான். அதற்கு அந்த வைத்தியர் ''கோடைகால ஆரமபத்தில் நீ முதன் முதலில் பார்க்கும் வண்ணத்துப் பூச்சியைப்பிடித்து அதனுடைய இறக்கையில இருக்கும் பொன் துகளகளை எடுத்து உனது மார்பினில் தடவிக் கொள்; நீ மிகவும் லேசாக மாறிவிடுவாய் என்று கூறினார்.

பழங்கால ரோமிலிருந்த காட்சி சண்டை வீரர்கள் கொடிய விலங்குகளின் இறைச்சியைப் பச்சையாகச் சாப்பிட்டனர். இதன் மூலம் விலங்குகளின் பலமும் வீரமும் தமக்கு நேரடியாக வந்துவிடும் எனநம்பினர். கிரீஸில் மல்யுத்த வீரர்களின் வியர்வையையும் அவர்கள் உடலிலுள்ள அழுக்கையும் சேர்த்து வலிமையூட்டும் மருந்தாக தயாரித்தனர். அவர்களுடைய விசிறிகளும் அவர்களுடைய எதிரிகளும் அதனைப் பெரிதும் விரும்பி வாங்கினர். சில சமயங்களில் அவர்களைப் போன்ற சிலைகளைச் செய்து வழிபடுவது தங்களுக்கு வீரத்தையும் சக்தியையும் அளிக்கும் என்றும் நம்பினர்.

கொலம்பிய நாகரிகத்திற்கு முற்பட்டதும் புதிய உலகில் மூந்தைய வரலாற்றிற்கும் உள்ளடங்கியதான தாவரங்களின் தன்மையை அறிந்து அதனை மருந்தாகவும் வழிபடும் பொருளாகவும் பயனபடுத்தினர். மெக்சிக்கன் இந்தியர்கள் 'கெயேட்டல்' எனும் ஒருவகைப் பொருளை அவர்கள் நடந்து வந்து களைப்படையும் போது பயன்படுத்தியதாக தெரிவிககப்படுகிறது.

இரண்டாம் உலகப்போரின் போது குளிரைப் பொறுத்துக் கொள்ளவும் வேகமாகப் போரிடவும் படைவீரர்களுக்குச் சில மருந்துகள் வழங்கப்பட்டன ''கேனபிஸ்'' போன்ற சில பொருள்கள் வியட்நாமில் போரிட்ட அமெரிக்க இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டது.

இத்தகைய மருந்துப் பொருள்களைப் பயன்படுத்தும் பழக்கம் விளையாட்டிற்கு எப்படி வந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இருந்தபோதிலும் ஒவ்வொரு காலத்திலும் தங்களுடைய திறமைகளை அதிகப்படுத்தவும் உடல், மனம் நன்முறையில்வேலைசெய்யவும் மருந்துகளைப் பயன்படுத்தினர். நாளாக ஆக இவ்வாறு மருந்துகளைப் பாவிக்கும் பழக்கம் விஞ்ஞான முன்னேற்றத்தால் அதிகமாகியது.

நவீன விளையாட்டுக்களில் பழங்கால வழிபாட்டு முறைகளின் மந்திர சக்தியானது முழுதும் மறைந்து விட்டது என்பதை ஒப்புக்கொள்ள இயலாது. பயிற்சியாளர்கள் விளையாட்டு வீரர்களுக்கு மனதில் தைரியம், தன்னம்பிக்கை, ஊக்கம் வெற்றி பெற வேண்டுமென்ற மன உறுதி, முடிவு ஒன்றையே குறிக்கோளாக வைத்துக் கொள்ளும் மனப்பாங்கு ஆகியவற்றை அதிகரிக்க வழிபாட்டு முறைகளை பயன்படுத்துகின்றனர். மருந்துகளை போட்டியின் போது பயன்படுத்துவதால் டற்றப் போட்டியாளர்கள் அதிருப்தி அடைகின்றனர் மெச்சிக்கோ நகரில் ஒலிம்பிக் விளையாட்டின் போது அமெரிக்கர்கள் ஒக்சிசனை உள்ளிழுதது பெரும் பரபரப்பை ஏற்படுத்தினர்.

விளையாட்டில் வெற்றி என்பது பல்வேறு காரணிகளைக் கொண்டது. இதில் விளையாட்டு வீரர்களின் உடல் அமைப்பு அவர்களுடைய பயிற்சியின் தரம், நுட்பமான திறன், மன நிலை ஆகியவற்றைக் கொண்டு அமைகிறது. தற்காலத்தில் வெற்றி என்பது மயிரிழையில் நிச்சயிக்கபபடுகிறது. பலவேறு மின்னணுக்கருவிகள் வெற்றியைத் தீர்மானிக்க தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் எந்தக் காரணியானது வெற்றியைத் தீமானிக்கிறது என்று கூற இயலவில்லை அது மட்டுமல்லாமல் விளையாட்டு வீராகள் பயன்படுத்தும் மருந்துகள் எந்த வகையில் உதவி செய்கிறது என்பதை அறிவியல பூர்வமாக அறிய முடியவில்லை,

இந்த மருந்துகளின் தாக்கமானது எந்தக் காரணிகளை தூண்டுகிறது என்பதை நாம் அறிய முடியாவிட்டாலும் மருந்துகளை உட்கொள்ளும் பழககமானது எதிர் விளைவுகளை விளையாட்டு வீரர்களுக்கு ஏற்படுத்துகிறது என்பதே உண்மையாகும வைத்தியம் போல அவர்களை ஓட வைக்கும் இம்மருந்து உடல் நலத்திற்குப் பெரும் தீங்கு விளைவிக்கிறது.

இக்காலத்தில் வெற்றியானது அபரிமிதமான மகிழ்ச்சியைத் தருகிறது. மண்ணிலிருக்கும் சொர்ககமாகிறது. வெற்றி பெறுவது என்பதே நவீன உலகில் இலட்சியமாகிறது.

இத்தகைய விளைவுகளிலிருந்து. விளையாட்டை மட்டும் மீட்பது என்பது ஆச்சரியப் படக்கூடிய செயலாகும். எப்படியும் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணமானது சில சமயங்களில் தீய எண்ணமாக மாறிவிடுகிறது பியரி டி கோபர்டின் பிரபு ஒலிம்பிக் விளையாட்டை ஆரம்பித்த 1908 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டில் பங்கு பற்றுவது வெற்றி பெறுவதற்கு மட்டுமல்ல, விளையாட்டில் பங்கேற்று மகிழ்ச்சியடைவதற்காகத் தான் என குறிப்பிட்டார்.

பழங்கால கிரேக்கர்கள் நினைத்ததற்கும், நவீன விளையாட்டிற்கு அடித்தளமிட்ட பியரி டி கோபர்டின் எண்ணியதற்கும் மாறாக விளையாட்டில் வெற்றி என்பது பொருள் சம்பாதிப்பதற்காக உதவும் கருவி என்ற நிலை வந்துவிட்டது. அத்துடன் விளையாட்டு வீரர்களைப் பயன்படுத்தி பொருள் சம்பாதிக்க எண்ணுபவர்கள் விளையாடுபவர்களின் அவல நிலையையோ, குறுகிய காலத்தில் வெற்றிகாண அவர்களைத் தூண்டும் மருந்துகளை உட்கொள்வதைத் தடுப்பதிலோ அக்கறை காட்டுவது கிடையாது.

தன்னுடைய சுய தேவைக்காகவும தன்னுடைய குழுக்களின் தேவைக்காகவும் விளையாட்டுக் கழகங்கள் இப்பொழுது வாணிபக் கழகங்களாக மாறிவிட்டன. சமுதாயமானது வெறுமனே போதை மருந்துகளைச் சாப்பிடக் கூடாது என்று சொல்வதோடு அதனுடைய அபாயங்களையும் எத்துரைத்து அதற்காகத் தகுந்த சட்டங்களையும் இயற்ற வேண்டும்.


போதை மருந்துகளை உட்கொள்வது - மக்களின் உடல் திறனை செயற்கைத் தனமாக அதிகப்படுத்துவது மோசமான பழக்கமாகும் விளையாட்டின் நோக்கத்திற்கு இது நேர் எதிராகும். அது மட்டும் அன்றி அவர்கள் தங்களாகவே வெற்றிகாண முயற்சி செய்வதை இது பெரிதும் தடை செய்கிறது. ஒருவர் மற்றொருவரை விட மருந்து உண்டு வெற்றி பெறுவதற்கு எண்ணுதல தீங்காகும். இது விளையாட்டு வீரர்களின் நன்னெறிக் கொள்கைகளைப் பெரிதும் பாதிக்கும். அது மட்டுமன்றி அவர்களுடைய மன நிலையையும் பாதிக்கும். சமுதாயத்தின் திறமையையும் வலுவின்றிச் செய்துவிடும். விளையாட்டின் மதிப்பினை நிஜமாக்காமல் நிழலாக்கிவிடும் என்பதே உண்மையாகும்.

– யுனெஸ்கோ கூரியர்


ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)

தெய்வேந்திரா (சாவகச்சேரி)

திரையரங்குகளில்




தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6867)



இன்று கோலாகல ஆரம்பம்

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய விழா

1993 ஜூன் 25, 26, 27

பேராசிரியர்கள் · விரிவுரையாளர்கள் · கவிஞர்கள் · கதாசிரியர்கள் · சொல்லேர் உழவர்கள்

உங்களோடு பேசுகிறார்கள்.

தினமும்

இடம் : மன்ற அரங்கு

★ நாதஸ்வர இசை
★ நடனம்
★ நாடகம்

நேரம் : மாலை 5.30

நன்றி:ஈழநாதம்

# பலவீனத்தை உணரும் தலைமைகளும் தென்னிலங்கை முஸ்லிம்களும்

இடம்: பாராளுமன்றக் கட்டடம், கொழும்பு.

காலம்: 18.06.93.

தலைமை: நீதி / உயர்கல்வி அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீட்.

கூட்ட ஏற்பாடு: வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர்

பங்கு பற்றியவர்கள்: முஸ்லிம்களான பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம்களான அமைச்சர்கள், முஸ்லிம்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள்.

ஆராயப்பட்ட விடயம்: வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றிய சர்வசன வாக்கெடுப்பும், முஸ்லிம்களின் நிலைப்பாடும்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு: குறிப்பிடும்படியாக எதுவும் இல்லை.

இந்தக் கூட்டம் மீண்டும் இன்று நடத்தப்படவுள்ளது. கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இக் கூட்டம் முஸ்லிம்கள் மத்தியில் புதியசிந்தனைப் போக்கு ஒன்று முளை விடுவதைக் கோடிகாட்டும் ஒரு நிகழ்ச்சியாகும் எனலாம்.

★ ★ ★

''வடக்குகிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக செய்யப்படும் ஏற்பாடானது தமிழர்களும், முஸ்லிம்களும் இனரீதியாகப் பிளவுபட்டிருப்பதற்கும் பிரிந்திருப்பதற்கும் வழிவகுக்கக் கூடாது. ஆண்டாண்டு காலமாக ஒற்றுமையுடன் ஒரு தாய் பிள்ளைகள் போல் வாழ்ந்த மக்கள் தொடர்ந்து சௌஜன்யத்துடன் வாழக்கூடிய ஒரு தீர்வையே நாம் காணவேண்டும். அத்தீர்வு தமிழர் மற்றும் முஸ்லிம் இனங்களுக்கு இடையே ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டும்''. இவ்வாறு கடந்த வெள்ளியன்று நடைபெற்ற கூட்டத்தின் தலைமையுரையில் அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீட் குறிப்பிட்டார்.

தொடர்ந்து இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய பலரும் வடக்கு, கிழக்கு இணைப்பு குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தக் கூடாது என்றும், அதற்கான உகந்த சூழ்நிலை இல்லை என்றும் தெரிவித்தனர்.

இதேவேளை ''முஸ்லிம்களின் மொத்த வாக்குகளையும் பெற்று, கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து பிரித்து விடலாம் என்று அரசு மனப்பால் குடிக்கின்றது. ஆனால் வடக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் நலன்கள் குறித்து கவனம் எடுக்காமல் கிழககில் முஸ்லிம்கள் செயற்படமாட்டார்கள்'' என்கிறார் சேகு இஸ்ஸதீன். இவர் கலைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் என்பதும், சிறிலங்கா முஸ்லிம் கட்சியின் தலைவர் என்பதும் தெரிந்ததே.

ஆக, வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து கிழக்கு மாகாணத்தில் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் சிறிலங்கா அரசாங்கத்தின் முயற்சி முஸ்லிம்களைப் பதற்ற மடையச் செய்துள்ளது என்பதும், ஆதரித்தாலும், எதிர்த்தாலும் பாதிக்கப்படுவது முஸ்லிம்களின் நலனே என்ற எண்ணம் முஸ்லிம் களிடம் மேலோங்கியிருக்கிறது என்பதும் புலனாகின்றது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு இத்தகைய வாக்கெடுப்பு நடத்துவது குறித்து சிபாரிசு எதையும் செய்ததா என்பதே கேள்விக்குரிய தாகியுள்ள இன்றைய நிலையில், பௌத்த சிங்களப் பேரினவாதம் தங்களை ஏமாற்ற முற்பட்டுள்ளது என்பதை முஸ்லிம்கள் பலரும் புரிந்து கொள்ளத் தலைப்பட்டுள்ளனர் என்பது கொழும்பிலிருந் கிடைக்கும் தகவல்கள் மூலம் தெளிவாகிறது.

## மாகாண சபைத் தேர்தலும் முஸ்லிம் அரசியல்வாதிகளும்:

1988-ம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தல்களின் போது முஸ்லிம்களான 32 பேர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டதோடு, வடக்கு-கிழக்கு மாகாண சபையிலும் 17 ஆசனங்களைப் பெற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது. 1988ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தல்களின் போது எட்டு மாகாணங்களிலும் 298

**இளையவன்**

வேட்பாளர்களை நிறுத்தி 3,12,825வாக்குகளை வென்று 29 உறுப்பினர்களை முஸ்லிம காங்கிரஸ் பெற்றுக்கொண்டிருந்தது. 1989-ம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தலின் போதும் 149வேட்பாளர்களை நிறுத்தி 2,02,016வாக்குகளை வென்று மூன்று ஆசனங்களை முஸ்லிம் காங்கிரஸ் பிடித்துக் கொண்டிருந்தது. ஆனால் நான்கு ஆண்டுகளின் பின்பு நிலைமை முற்றாக மாறியுள்ளது. ''முஸ்லிம் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் கட்சியாக முஸ்லிம் காங்கிரசை ஆதரியுங்கள்'' என்ற அஷ்ரப்பின் வேண்டுகோள் ஆகக் குறைந்தபட்சம் வடக்கு-கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லிம்களால் அநேகமாக நிராகரிக்கப்பட்டுவிட்டது. கடந்த மாகாணசபைத் தேர்தலில் 48,379 வாக்குகளை மட்டுமே பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் மத்திய மாகாணத்தில் ஓர் ஆசனத்தையும், வடமேல் மாகாணத்தில் ஓர் ஆசனத்தையும் மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. ஏழு மாகாணசபைகளிலும் மொத்தம் பன்னிரண்டுஆசனங்களையாவது பெற முடியும் என்று எதிர்பார்த்ததாக குறிப்பிட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தோல்வியை ஒப்புக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளைமே17இல்நடந்த மாகாணசபைத்தேர்தல்களைப் பொறுத்த வரை ஏற்கனவே இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் அரைவாசிக்கும் குறைவானோரே தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணசபையில் முன்பு பத்து முஸ்லிம் உறுப்பினர்கள் இருந்தனர். இப்போது அது ஆறு ஆகியுள்ளது. வடமத்திய மாகாணசபையில் ஐந்தாக இருந்தது மூன்றாகவும், மத்திய மாகாணசபையில் ஐந்தாக இருந்தது நான்காகவும், தென் மாகாண சபையில் ஐந்தாக இருந்தது ஒன்றாகவும குறைவு அடைந்துள்ளது. ஊவாவிலும், சப்பிரகமுவாவிலும் முஸ்லிம் உறுப்பினர்கள் எவருமேதெரிவு செய்யப்படவில்லை. புத்தளம், சிலாபம் பகுதிகளை உள்ளடக்கிய வடமேல் மாகாணத்தில் மட்டும் ஐந்து முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதாவது ஏழுமாகாணசபைகளிலும் மொத்தம் 19 முஸ்லிம்கள் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் காலி, மாத்தறை, மொனராகல கேகாலைபதுளை போன்ற முஸ்லிம்கள் கணிசமான அளவில் வாழும் மாவட்டங்களிலிருந்து முஸ்லிம்களில் ஒருவரேனும் எந்தக்கட்சியிலும் இருந்து தெரிவு செய்யப்படவிலலை. அத்துடன் ''தேசியக் கட்சிகள்'' தமக்குக் கிடைத்த 'போனஸ்' ஆசனங்களைத் தானும் முஸ்லிம்களுக்கு உவந்து அளித்திடவில்லை. இவற்றினால் முஸ்லிம் அரசியல்வாதிகள் மத்தியில் தமது எதிர்காலம் குறித்த ஏக்கப் பெருமூச்சு தோன்றியுள்ளது.

## முஸ்லிம்களின் உள்ளக் குமுறல்கள்:

''புலப்படக்கூடிய வகையில் எமது சமூகத்தவரின் பிரதிநிதித்துவம் இருக்குமானால்பிராந்திய மட்டத்தில் சமூகத்திற்கு ஏதாவது செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கும். அவ்வாறு இல்லாத நிலையானது முஸ்லிம்கள் பின்னணிக்குக் தள்ளப்பட்டுவிட்டனர் என்பதையே காட்டுகின்றது'' என்கிறார் தன்னை அடையாளம் காட்ட விரும்பாத முஸ்லிம் வர்த்தகர் ஒருவர். ஆசியாவின் பல தலைநகரங்களிலும் சிறிலங்காவின் தூதுவராக முன்பு பணியாற்றிய இஸட் உசைன் கூறுகையில் ''விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப் படுவதற்கு முன்பாக முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதன் மூலமே தமது வெற்றியை சிங்களக் கட்சிகள் உறுதிப்படுத்திக் கொண்டன. ஆனால் இப்போது அந்த நிலை இல்லை. தேர்தல் மாவட்டங்கள் பெரிதாக இருக்கையில் குறிப்பிட்ட சில பகுதிகளில் செறிவாக வாழும் முஸ்லிம்களால் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை'' எனக் குறிப்பிட்டார். ''சமூகத்தின் தனித்துவத்தை தக்க வைத்துக் கொள்வதற்கே இப்போது முக்கிய கவனம்செலுத்தப்பட வேண்டியுள்ளது'' என்கிறார் டாக்டர் சுக்ரி. பேராதனைப் பல்கலைக்கழக அரபுத்துறைத் தலைவரான டாக்டர் சுக்ரி மேலும்கூறுகையில் ''சிறிலங்காவின் ஏனைய சமூகங்கள் மத்தியில் முஸ்லிம்கள் இணக்கமாக வாழ்கின்றனர். ஆனால் இதுவே எமது கலாசார தனித்துவத்தையும், அடையாளத்தையும் இழந்து விடலாம் என்ற ஆபத்தையும் கொண்டுள்ளது'' என்று தெரிவிக்கிறார். அத்துடன் சிறிலங்காவில் முஸ்லிம்களின் பிரச்சினை இடத்துக்கு இடம் வேறுபட்ட பரிமாணங்களைக்கொண்டிருப்பதாகவும், அதனால் எந்த ஒரு கட்சியும் தனிப் பெரும்பான்மை ஆதரவை முஸ்லிம்களிடமிருந்து பெற முடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரபு நாடுகள் அவ்வப்போது சில சமூக - பொருளாதார திட்டங்களுக்கு உதவி செய்தாலும்கூட அரபு அரசுகள் எவற்றிடமிருந்தும் சிறிலங்கா முஸ்லிம்களுக்கு அரசியல் ஆதரவு கிட்டப்போவதில்லை என்றும், சிறிலங்கா முஸ்லிம்களுக்கு அரபு நாடுகளுடனான உறவு குறிப்பிடும்படியாக எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கின்றார் இஸட் உசைன்.

## பேரம்பேசும் சக்தி இழந்தவர்களாக....

இந்த நிலையில்தான் சிறிலங்காவில் இன்று முஸ்லிம்கள் தாம் பேரம்பேசும் சக்தியை இழந்திருப்பதாக எண்ணத் தலைப்பட்டுள்ளனர். ஆட்சி செய்யும் அரசாங்கத்துடன் ஓர் அங்கமாக இருந்து கொண்டே தனது மக்களின்நல உரிமைகளுக்காகவும், இனத்தின் நலன் சார்ந்தும் இ.தொ.காவும் அதன் தலைவர் தொண்டமானும் செயற்படுவதுபோல ஆளும் கட்சியில் இருக்கும் முஸ்லிம் அமைச்சர்களினாலோ, பாராளுமன்ற உறுப்பினர்களினாலோ தனித்துவமாகச் செயற்பட முடியவில்லையே என்றும் அவர்கள் கவலை கொண்டுள்ளனர். தேசியக் கட்சிகள் - முஸ்லிம்களின் வாக்குகளைக் கவருவதற்காக செல்வாக்கு மிகுந்தவர்களுக்கு தலைவர் பட்டம் சூட்டுகின்றதே தவிர முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும், கலாசார அடையாளத்தையும் காப்பதற்குத் தயக்கம் காட்டுகின்றன என்ற எண்ணம் முளைவிடத் தொடங்கியுள்ளது அதாவது சுருக்கமாகச் சொன்னால் வடக்கு கிழக்கு மாகாண அரசியல் அதிகாரத்தில் முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்து அதிகமாக அலட்டிக் கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் தனது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ள அதிகாரங்கள் என்ன என்ற கேள்வி முஸ்லிம் மக்களிடையே அரும்பத் தொடங்கியுள்ளது.

## புதிய அமைப்பின் உருவாக்கம்:

''ஒரு ஜனநாயக சமூகத்தில் அரசியல் பிரதிநிதித்துவம் அவசியம். வாக்குரிமை உள்ளவர்களுக்கே பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ள முடியும். வாக்குகள் நிறுக்கப்படுவதில்லை. எண்ணப்படுவதாகும். இன்று பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளாமல் இருப்பதால் எமது அரசியல் பலம் குறைகிறது. எனவே நீங்கள் அனைவரும் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளுங்கள்'' என்ற வேண்டுகோளுடன் ''இலங்கை முஸ்லிம்களின் உரிமைக்கான இயக்கம்'' என்னும் புதிய அமைப்பு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இவ் அமைப்பின் தலைவராக நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீட் செயல்படுகின்றார்.

சிறிலங்காவின்எதிர்கால அரசியலில் முக்கிய கட்சிகளுடன் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக பேரம் பேசக்கூடிய நிலையை எட்டவேண்டும் என்றும், அதன்மூலம் தான் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும் என்றும், இந்த அமைப்பினர் கருதுகின்றனர். இதனையேதமது இலக்காகவும் அவர்கள் வரித்துள்ளனர் என்றும் எண்ண முடிகின்றது.

இது, ''முஸ்லிம்களுக்கு சில உத்தரவாதங்கள் தேவைப்படுகின்றன. பாதுகாப்பு பற்றி அவர்கள் சிந்திக்கிறார்கள். அதிகாரப் பங்கீட்டில் முஸ்லிம்கள் நியாயமான பங்கு பெற வேண்டும். இதன் மூலம் பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்'' என்று நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் கடந்த வெள்ளியன்று நடந்த கூட்டத்தின் இறுதியில் வழங்கிய பதிலுரையில் குறிப்பிட்டதிலிருந்து புலனாகின்றது.

ஆரம்பம் முதலே முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் கட்சி அமைக்க வேண்டும் என்பதையும், முஸ்லிம்களின் அரசியல் தனித்துவம் பேணப்பட வேண்டும் என்பதையும் தேசிய கட்சிகளில் இருந்த முஸ்லிம் தலைவர்கள் எதிர்த்து வந்தனர்.

தேசிய கட்சிகள் தமக்கு சூட்டிய மகுடங்களில் திருப்தியுற்றவர்களாக முஸ்லிம்களுக்கு கிடைக்க வேண்டிய அரசியல் அதிகாரம் பற்றி வாய்மூடி மௌனிகளாயினர். இதேவேளை ''கிழக்கில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கில் முஸ்லிம்களின் தனித்துவ உரிமைகள் குறித்து ஆர்வத்துடன் அக்கறை காட்டினர்.'' இதனால் அஷ்ரப் போன்றவர்கள் அரசியலில் தலையெடுத்தனர். எனினும் இன்று கிழக்கு மாகாணத்தில் தேர்தல் எதுவும் நடைபெறாத நிலையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெற்ற தேர்தல்களில் தமது இடங்கள் பறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு திகைத்துப் போயுள்ளனர். தேசியக் கட்சிகளுடன் இணைந்து நின்று அதன் நலனுக்கு உட்பட்ட வகையில் மட்டும் முஸ்லிம் நலன்கள் குறித்து சிந்தித்தவர்கள் இன்று அதிலிருந்தும் விடுபட்டவர்களாக பேரம் பேசும் சக்தி உடையவர்களாக மாறினால் மட்டுமே எதிர்கால அரசியலில் நிலைபெறலாம் என்று எண்ணத் தலைப்பட்டுள்ளனர். இதில் ''தனியான அரசியல் கட்சி அமைக்க முற்படுவது முஸ்லிம்கள் அழிவதற்கே வழிவகுக்கும்'' என்று கூறிவந்த அஸ்வர் போன்றோர் கூட விதி விலக்குப்பெறவில்லை.

இவ்வாறான நிலையில் புதிய அமைப்பின் உருவாக்கம் அரசியல் அரங்கில் முக்கியமானதாகும். இருப்பினும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அதன் தலைவர் தொண்டமான் போல பலம் பொருந்திய -பேரம் பேசும் சக்தியை முஸ்லிம்கள் பெறுவது கடினம். ஏனெனில் இ.தொ.காவின் பேரம் பேசும் சக்திக்கு மலையக தோட்டத் தொழிலாளரின் ஏகோபித்த ஆதரவு மட்டும்தான்காரணம் இல்லை. மலையகப் பகுதிகளில் செறிவாக வாழ்வதும், சிறிலங்கா பொருளாதாரத்தில் மலையக மக்களின் உழைப்பு வகிக்கும் பாத்திரம் போன்றவை கூட தொண்டமானுக்கு பலம் சேர்ப்பவை ஆகும்.

தொடர்ச்சியான தொரு நிலப்பரப்பையும், சுயசார்பான பொருளாதார அமைப்பையும் கொண்டிருக்காத முஸ்லிம் சமூகம் ஒரு சில மாவட்டங்களில் செறிவாக வாழும் போதும் எல்லா மாவட்டங்களிலும் பரந்துள்ள தன்மையினால் ஒரு சக்தியாக பரிணமிப்பது என்பது சாத்தியம் என்று சொல்வதற்கில்லை. எனினும் 1948 முதல் சிங்கள பௌத்த பேரினவாதம் சிறுபான்மை இனங்கள் மீது மேற்கொண்டு வரும் அடக்குமுறையை சிறிலங்கா முஸ்லிம்கள் இப்போதுதான் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர் என்று கொள்ளலாம்.

# தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்ட யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி சிறப்பிதழ்

## சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதன் தோற்றமும் வளர்ச்சியும்

நூற்றாண்டு நிறைவை அமைந்து நிற்கும்இவ்வேளையிலே இது ஒரு தேசிய பாடசாலையாகத் தரமுயர்ந்து, தலை நிமிந்து நிற்கிறது. இச் சந்தர்ப்பத்தில் இக் கல்லூரியின் வரலாற்றைச் சுருக்கமாக இரை மீட்பது பொருத்தமானதே.

அந்நியர் ஆட்சியிலே சைவமானது தலையெடுக்க முடியாது தடுக்கப்பட்டது. சைவமானது புத்துயிர் பெற்றுப் புகழ்பெறச் செய்ய வேண்டுமென விரும்பினர் சைவப் பெருமக்கள். அவர்களது பெரு முயற்சியால் 1904-ம் ஆண்டு சாவகச்சேரிச்சந்தைக்குச் சமீபமாக ஒரு சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை தொடங்கப்பட்டது இடப்பற்றாக்குறை காரணமாக அடுத்த ஆண்டிலேயே அது சங்கத்தானைக்கு இடமாற்றவேண்டியதாயிற்று இப் பள்ளியின் முதற் தலைமையாசிரியராக திரு எஸ் கே கந்தசாமி அவர்கள் கடமையாற்றும் பாக்கியம் பெற்றார். 1907-ம் ஆண்டில் இது இருமொழிப்பள்ளியாகவும், தமிழ்ப் பள்ளியாகவும் இரு கூறாகி இயங்கின. தொடர்ந்து அடுத்த ஆண்டில் தமிழ்ப் ள்ளி சங்கத்தானை முருகன் கோவில் பின் வீதிக்கு இடம்பெயரலாயிற்று. அரசின் உதவியின்மையால் பல இன்னல்களையும், தடைகளையும் இருமொழிப்பள்ளி எதிர்கொள்ளலாயிற்று.

செய்வதறியாது. தடாகக் கரையிலிருந்து தவித்த சம்பந்தருக்கு தோணிபுரத்து ஈசன் உதவியது போல, சைவப் பெருமகனும், பொதுநலத் தொண்டனுமான திரு. தாமோதரம்பள்ளை அவர்கள் கைகொடுத்து உதவ அவரது வள்ளன்மை முன்வந்தது, மூன்று சிறு கட்டடங்களுடன் இருமொழிப் பள்ளி ஆங்கிலப் பள்ளியாக மாற்றம் பெற்றது. பின்னர் தனித்தியங்கிய தமிழ்ப் பள்ளியும் அவரது முயற்சியால் இங்கு மாற்றப்பட்டது. இந் நிலையமே இன்று வளர்ச்சியுற்று, தரமுயர்ந்து மகிழ்கிறது.

ஆங்கிலப் பள்ளியின் ஆரம்ப காலத்தில் திருவாளர்கள் கார்த்திகேசு, சுவாமிநாதன், கென்சுமன் ஆகியோர் தலைமையாசிரியர்களாயிருந்தனர். அவர்களைத்தொடர்ந்து திரு. ந. அருணாசலம் அவர்கள் தலைமையை ஏற்றார். பள்ளி பல்லாற்றானும் வளர்ச்சி கண்டது. வளர்ச்சியின் ஒரு சின்னமாக 'பிரதான மண்டபம்' இன்றும் காட்சியளிக்கிறது. அவர்களைத் தொடர்ந்து திரு வி. பாலசுந்தரம், திரு பொ. தம்பு ஆகியோர் பணியாற்றினர். 1942இல் திரு த. முத்துக்குமாரு அவர்கள் அதிபரானார். சிறந்த அறிஞர், ஒழுக்கசீலர், கல்வியிலே கண்ணுங்கருத்து மானவர். இவரின் சேவைக் காலத்திலே ஆசிரியராகவும் துணை அதிபராகவும் கடைமையாற்றிய கல்லூரியின் பழைய மாணவரான திரு. வே. குமாரசாமி அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகித் துணையமைச்சராயிருந்த வேளை அவரது உறுதுணையோடு 'சி' தரத்துக் கல்லூரி படிப்படியாக உயர்ச்சி பெற்று 'ஏ' தரத்தை எய்தியது. இதனைத் தொடர்ந்து 1951ல் திரு. ஏ. எஸ் கனகரத்தினம் அவர்கள் நிலையத்தின்வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றார் அவரது சேவையைத் தொடர்ந்து திரு எஸ். கே. செல்லையா அவர்கள் அதிபராகச் சிலகாலம் கடமையாற்றினார் 1953-ல் திரு. ஆ. மண்டலேஸ்வரன் அவர்கள் அதிபராகிச் சிறந்த சேவையாற்றினார். 1957-ல் தனியாக இயங்கிவந்த தமிழ்ப் பள்ளி ஒன்றிணைக்கப்பட்டது.

1963-ல் அதிபராகப் பதவியேற்ற திரு. ஆ. க. கந்தையா அவர்கள் அந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ ந. நவரத்தினம் அவர்களின் உறுதுணையோடு ஆக்கப்பணிகள் சிலவற்றை நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து அதிபரான திரு மு. வைத்திலிங்கம் அவர்கள் கல்லூரியைச் சிறந்த முறையில் வழிநடத்திச் சென்றார். இவரது சேவைக்காலத்திலேயே திரு. எம். ரி சுப்பிரமணியம் ஜே. பி அவர்களால் ஓர் அழகான 'திறந்தவெளி அரங்கு' அமைக்கப்பட்டது. 1970-ல் திரு. பூ. வெற்றிவேலு அவர்கள் செயலாற்றும் முதல்வரானார்.

இருபத்தைந்து ஆண்டுகட்கு மேலாக ஆசிரியராக, துணை அதிபராக இருந்து பெற்ற பட்டறிவால் செயற்றிறனும், ஆற்றலும் மிக்க ஓர் அதிபராகக் கடமையாற்றினார். இவரது பணியினாலேயே கல்லூரி வீறுநடைபோட ஆரம்பித்தது என்றால் மிகையாகாது. நூல் நிலையமும், அலுவலகமும அடங்கியஇருமாடிக் கட்டடத்தையும், ஒரு சிறந்த விளையாட்டு மைதானத்தையும்பொருத்தமாகஅமைத்துள்ளார். அவர் ஓய்வு பெற்றமையை அடுத்து திரு. கே. மகேஸ்வரன் அவர்கள் சிறந்த முறையில் கல்லூரியை நிருவகித்து வந்தார். அன்னாரது ஓய்வினைத் தொடர்ந்து 1985 முதல் ஐந்தாண்டுகள் திரு க. சி. குகதாசன் அவர்கள் அதிபராகச் சேவையாற்றினார், இவர் ஒரு சிறந்த நிருவாகி அஞ்சா நெஞ்சன், நெருக்கடிகடகு முகம் கொடுத்துவெற்றி காண்பதில் தீரர் இவரது முயற்சியால் 1989-ல் கல்லூரியின் ஓர் அங்கமான பிரதம பகுதி வேறுபடுத் தப்பட்டு, 'சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை' என்றபெயரோடு திரு. வ. கைலேஸ்வரன் அவர்களை அதிபராகக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

01.06 1990 முதல் திரு. கே. சந்திரசேகரா அவர்கள் அதிபராகக் கடமையாற்றி வருகிறார். அறிவு, ஆற்றல், அடக்கம், அமைதி, சாந்தம் ஆகிய நற்பண்புகளைத் தன்னகத்தேகொண்டவர். கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக ஆசிரியராக, துணை அதிபராக கடமையாற்றிப் பெற்ற அனுபவத்தினால் கல்லூரி உயர்ச்சி பெற முடிகிறது.

இன்னும் இக்கல்லூரி பல்லாற்றானும் சிறப்புப பெற்று தென்மராட்சி மக்களின் கல்விப் பசியை நீக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இந் நந்நாளிலே வேண்டுதல் செய்வோமாக.

## ஆசிச் செய்தி

ஒரு சிறிய கூரையாலான கட்டடத்தில் இருந்து வளர்ச்சிபெற்று காலமாற்றத்தின் தாக்குதல்களால் தோல்வியுறாது வலுப்பெற்று இன்று தேசிய பாடசாலையாகும் இக்கல்லூரி தென்மராட்சி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். நான் இக்கல்லூரியிலே ஆசிரியர் பணியை ஆரம்பித்து ஓய்வு பெறும் வரை தொடர்ந்து பணியாற்றியமையிட்டு பெருமையடைகிறேன் எதிர்காலத்தில இத்தேசிய கல்லூரி மென்மேலும் வளர்ச்சியுற்று சிறந்த அறிவொளிபரப்ப இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. க. மகேஸ்வரன்
(முன்னாள் அதிபர்)

இதழாக்கம் :
தி. முருகதாசன்

## வாழ்த்துச் செய்தி

நாவலர் பெருமானின் சைவப் பணியைத் தொடர்ந்து அவரது மருமகன் பொன்னம்பலப் பிள்ளையின் தலைமையில் சைவப் பெரியார்களை உள்ளடக்கிய சைவ பரிபாலன சபை 1888-ம் ஆண்டு தாபிக்கப்பட்டு - 1890-ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கபபட்டது.

இச்சபையின் பெரியார்களுள் ஒருவரான சாவகச்சேரியைச் சேர்ந்த அமரர் திரு. தாமோதரனாரது முயற்சியினால் 1902-ம் ஆண்டு கிறிஸ்தவக் குருமாரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரி நிறுவப்பட்டதால் தென்மராட்சி சைவ மாணவர்களின் கல்விப் பசி தீர்க்கப்பட்டது.

இக்கல்லூரியின் தற்கால வளர்ச்சியில் முன்னாள் அதிபர்கள் திரு.பூ. வெற்றிவேலு, திரு குகதாசன் ஆகியோரின் பங்கு குறிப்பிடத்தக்கது. இன்று இக்கல்லூரி ஆண்டு 6 முதல் க. பொ. த. (உ/த) வரை 2300 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கும் தேசிய நிலையை அடைந்து உன்னதமாக காட்சியளிப்பதையிட்டு அகம் மகிழ்கிறேன். இக் கல்லூரியின் தற்போதைய கல்வி வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அதிபர் திரு. க. சந்திரசேகரர் அவர்கள் ஆற்றிய பங்கு அளப்பரியது. அன்னாரின் மூன்றாண்டு தலைமையில் இக்கல்லூரி ஒரு தேசிய நிலையை அடைந்ததை மனமார வாழ்த்தி, அவர் சேவை பல ஆண்டுகாலம் இக்கல்லூரிக்குக் கிடைக்க வேண்டும் எனவும் இக்கல்லூரி மேலும் வளர்ச்சியடைந்து எமது சிறார்களின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன். வாழ்க, சாவகச்சேரி இந்து! வளர்க, அதன் பணிகள்!

பொ. சிவகுருநாதன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

## தொடரட்டும் கல்விப்பணி

சாவகச்சேரியில் ஓரறைப் பாடசாலையாக அமைந்து ஒவ்வொன்றாய் வளர்ந்து காலத்தோடு போட்டியிட்டு இன்று காலத்தையும் வென்று கதிரொளிவீசி கண்கவர் கலைக்கூடமாய் மாறி கவின்பெறு கல்வியின் பயன்தரு விருட்சமாய் தென்மராட்சிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் சுருங்கிடச் சொல்லின், உலகின் நாலாபக்கமும் நற்கதிர் ஒச்சும் நல்லவர் பலரைத் தந்து நலம்பெற வளர்வது இக்கல்லூரி. இன்று தேசிய அந்தஸ்தோடு தேசமே வியந்து நிற்க நாட்டின் முன்னணிக் கல்லூரிகளில் முதல் வரிசையில் முந்திய இடம்பிடிப்பது இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு இடப்பட்ட முத்திரையாகும்.

தன்னலம் மறுத்த சேவை தனிப்பெரும் கருணை உள்ளம் கொண்டு இக்கால ஆசிரியரும், அதிபரும் மட்டுமன்றி பன்னெடுங்காலமாக பழுதறத்தொண்டு செய்த புகழ்பூத்த அதிபர்களும் ஆசிரியமணிகளும், உயர்வுபெற்ற மாணவச்செல்வங்களும், இன்றுள்ள வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தனர் எனக்கண்டோம். அப்பணி மேலும் தொடரின் உய்வுறும் கல்வி, உயர்வுறும் அறிவு நாடும் மக்களும் நலம்பெறுவர். நானிலம் உம்மைப்போற்றும்.

திரு. மு. திருநாவுக்கரசு
(மாவட்ட நீதிபதி)


## தரமுயரும் சாவகச்சேரி 'இந்துவை' மகிழ்வுடன் வாழ்த்துபவர்கள்

(சி/6891)

| | | | | |
|---|---|---|---|---|
| நாதன் கூல் அன் கோப்பி பார்<br>சங்கத்தானை,<br>சாவகச்சேரி. | நிருத் தளபாட விற்பனை நிலையம்<br>கண்டிவீதி,<br>சாவகச்சேரி. | இடியல் லேக்ஸ்<br>கண்டிவீதி,<br>சாவகச்சேரி. | மங்களா விற்பனைநிலையம்<br>கண்டிவீதி,<br>சாவகச்சேரி. | ஸ்ரீவிக்னேஸ்வரா களஞ்சியம்<br>சாவகச்சேரி. |
| கஸ்தூரி<br>பிரதான வீதி,<br>சாவகச்சேரி. | விமலாஸ்<br>நவீன சந்தை,<br>சாவகச்சேரி. | முத்துச்சரம்<br>பிரதான வீதி,<br>சாவகச்சேரி. | யூப்பிற்றர் கல்வி நிலையம்<br>சங்கத்தானை,<br>சாவகச்சேரி. | ஜெயா ஸ்ருடியோ<br>கண்டிவீதி,<br>சாவகச்சேரி. |

# பொருளாதாரத் தடை தளர்வு; புலிகளின் ராஜதந்திர வெற்றி



ஏ[illegible]பகுதி மீது சிறிலங்கா அர[illegible]ம விதித்த பொருளாதார முற்றுகையானது தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க மேற்கொண்ட முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதனை இராணுவத் தீர்வின் முக்கியமான ஒரு பகுதி ஒன்று என்றும் கொள்ளலாம். அத்தோடு, இப்பொருளாதாரத் தடையானது தனியாக இராணுவ அதிகாரிகளின் திட்டமும் அன்று.பாதுகாப்பு அமைச்சிற்கு உள்ளும், புறமும் இருந்தே இத்திட்டம் உருவானது.

"கிழக்கிலிருந்து மேற்கு வரை ஒரு கோட்டைக்கிழித்து பொருளாதாரத் தடையை விதிப்பதன் மூலம் நீண்டகால யுத்தத்தை எதிர்கொண்டு விடுதலைப் புலிகளை திணறடிக்கலாம். இதனால் இராணுவம் கிழக்குடன் மீளவும் தொடர்பை ஏற்படுத்த முடியும். ஆயுதங்களை அதிகரிக்கவும் படையின் புதிய உத்வேகத்தைப் பெறவும் உதவும். விடுதலைப் புலிகளுக்கான விநியோகத் தொடர்பை துண்டிப்பதன் மூலம் அவர்கள் சோர்வடைவார்கள்"

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகி ஒரு சில மாதங்களின் பின், முன்னாள் இராணுவ அதிகாரியான கேணல் பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கு பொருளாதாரத் தடையும், முற்றுகையும் அவசியம் என்பதைப் பீரிஸ் வற்புறுத்தினார். இந்நிலைப்பாடானது சிறிலங்கா அமைச்சிற்கும், வெளியிலும் பரவலாகவே இருந்தது. இராணுவ வெற்றி என்பது இராணுவ நடவடிக்கையுடன் இணைந்த பொருளாதார முற்றுகை மூலமே சாத்தியமாகக் கூடியது என பலர் வற்புறுத்தினர். இதன் அடிப்படையிலேயே 1990 ஓகஸ்டில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஜெனரல் சிறில் ரணதுங்கா 47 பொருள்கள் மீதான தடையை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதித்தார். அத்தோடு, விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடையானது தீவிரமாக அமுல்படுத்தப் பட்டும் வந்தது.

இவை அவ்வாறிருக்க 1992 என்றே சிங்கள அரசு தரப்பிலும், இராணுவத்தரப்பிலும் எண்ணப்பட்டது. பேரினவாதப்பத்திரிகைகளும் இவ்வாறே காட்ட முற்பட்டன.

இவ்வருட ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வந்த அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் கோரிக்கைக்கு இணங்கி நல்லெண்ண அடிப்படையில் விடுதலைப்புலிகள் இருபொலிசாரை விடுதலை செய்தது குறித்து 'ஐலண்ட்' பத்திரிகை எழுதிய ஆசிரியர் தலையங்கம் அதனை தெளிவாக பிரதிபலித்தது.

"யாழ்குடாநாட்டை சுற்றி அமுல்படுத்தப்படும் பொருளாதாரமுற்றுகையானது விடுதலைப்புலிகளையும் பொதுமக்களையும்கூட நன்குபாதித்துள்ளது. இந்தப் பொருளாதார முற்றுகையைதளரச்செய்வதே விடுதலைப்புலிகளின் முக்கிய நோக்கம். இதற்கு ஆயர் கென்னத் பெர்னான்டோவின் வருகையை நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளனர்" என 'ஐலண்ட்' எழுதியது.

இதேபோன்றேபத்திஎழுத்தாளர்சுமித்திர பெர்னாண்டோ "இரண்டு பேரை விடுதலை செய்துவிட்டது என்பது தாயகத்தை விடுதலை செய்வதற்கான அவர்களது இரத்தம் சிந்தும் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டனர் என்பதை எடுத்துக்காட்டப் போதுமானதல்ல. இருவரை விடுதலை செய்துவிட்டு அவர்கள் கோருவது முழு அளவினதான இராணுவ தந்திரத்தை மாற்றும்படியாகும்" என வியாக்கியானம் செய்தார்.

இந்நிலையில், யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும்—அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையானது பொருளாதார முற்றுகை மட்டிலும் தளர்ச்சியை

**- ஜெயராஜ் -**

ஏற்படுத்தவில்லை. இரண்டாம் கட்ட ஈழப்போரில் நீண்டகாலப் போர் ஒன்றிற்காக சிறிலங்கா இராணுவம் வகுத்து வைத்துள்ள திட்டத்திலும் தடங்கல்களையும்,

ஏனெனில் பொருளாதாரத் தடை தளர்ச்சி நடவடிக்கையானது சிறிலங்கா அரசாங்கம்விடுதலைப்புலிகளுக்குபணிந்து போனதைக் காட்டுவதாகவும்,தமது இராணுவ தந்திரோபாயத்திற்கு முரணானது என இராணுவ உயர் அதிகாரிகள் பலர் அதிருப்திப் படுகின்றனர். இதனால் இராணுவத்தை திருப்திப் படுத்தும் நோக்கில், கைதிகள் பரிமாற்றத்தின் பொருளாதாரத் தடையை மீண்டும் அமுல்படுத்தலாம். பின்னர் போரைத் தொடர்ந்து நடத்தலாம்.

ஆனால், தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும்சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொண்டால் ஆச்சரியமோ, அதிர்ச்சியோ அடையப்போவதில்லை. ஏனெனில் இவ்வாறாக ஏமாற்ற முற்படுவது சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்து புதியதொன்றல்ல.

ஆனால், முன்னர் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியது போல் தற்போது ஏமாற்றிவிட முடியாது. ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இதன் வெளிப்பாடாகவே கைதிகளின்விடுதலையை கட்டம் கட்டமாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளதாக ஊகிக்கமுடிகின்றது. ஆனால் கைதிகள் பரிமாற்றம் நிறைவு பெற்றதும் உடன்பாட்டை அரசால் கைவிட முடியும். ஆனால் அது புலிகளுக்கோ, தமிழ் மக்களுக்கோ ஏமாற்றமாக இருக்கப்போவதில்லை. ஆனால் அது அரசாங்கத்திற்கே அவமானத்தைத் தேடித்தரும். உடன்பாடு ஒன்றை அரசு முறித்துக் கொண்டதாகக் கருதப்படும்.

ஆனால் இவ்விவகாரம் இலங்கை அரசியலைப் புதிய கட்டம் ஒன்றிற்கு நகர்த்திச் செல்லக்கூடியதாகும். இதுசிறிலங்கா அரசாங்கம் பொருளாரத் தடைமீதான தளர்ச்சியை எவ்வாறு கையாளப்போகின்றது என்பதைப் பொறுத்தது. அதாவது பொருளாதாரத் தடைத் தளர்ச்சியை, ஓர் இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான தீர்வை உருவாக்குவதற்கான ஒரு சூழலாகக் கொள்ளப்போகின்றதா, அன்றி விடுதலைப் புலிகள் போர்க்கைதிகள் மூலம் தம்மை பணிய

இணக்கப்பாடானது ஒரு சமாதானத்திற்கான ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளதாகவே விடுதலைப் புலிகள் கருதுவது போல் தெரிகின்றது.

இந்நிலையில், அடுத்த கட்டத்தை தீர்மானிப்பவர்களாக அரசாங்கமே உள்ளது. தற்பொழுது தளர்த்தியுள்ள பொருளாதாரத் தடையை கைதிகள் விடுதலையின் பின் இறுக்கலாம் என அரசாங்கம் கருதுமானால் அது நடைமுறைச் சாத்திய மற்றதொன்றல்ல. ஆனால் இது சிறிலங்கா மேற்கொண்ட ஓர் உடன்பாடு மீறலாகவே இருக்கும்.

ஆகையினால், இதில்சிறிலங்கா பெருமைப்பட்டுக் கொள்வதற்கோ விடுதலைப் புலிகளையோ. தமிழ் மக்களையோ ஏமாற்றிவிட்டதாகவோ கருதுவதற்கு எதுவும் இருக்கப் போவதில்லை. மாறாக மக்களுக்கும், நாட்டிற்கும் கேடு செய்ததாகவே இருக்கும். அத்தோடு இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காணும் ஒரு சந்தர்ப்பத்தை டி. பி. விஜயதுங்கா அரசாங்கம் [illegible]தவறவிட்டதாகவும் இருக்கும்.

## வளைகுடா

த்ததன் மூலம் ஈராக்கிய விமானப்படையின் எதிர்ப்பு இல்லாமல் செய்யப்பட்டது.டயிற்சின் அதிரடிப்படை (கடற்படை) குவைத் கடற்கரையில் போலியான குண்டு வெடிப்புகளை ஏற்படுத்தி ஈராக்கியரின் கவனத்தை கடலின் பக்கம் திருப்ப தரைப்படை நகர்வு சாத்தியமாக்கப்பட்டது. இராணுவத்தின் விசேட அதிரடிப் படை பிரிவுகள் ஈராக்கினுள் நுழைந்து ஸ்கட் ஏவுகணை தளங்களை கண்டறிந்து அழிக்க உதவினர். சதாம் குசைனின் குடியரசு காவல் படை எனும் டாங்கிப்படை நகர்வு குறித்து தகவல் தந்த வண்ணமிருந்தனர். விமானம் மூலம் துண்டு பிரசுரங்கள் வீசியும் 'வளைகுடாவின் குரல்' (Voice of the Gulf) என்ற விசேட வானொலி நிகழ்ச்சி மூலம் ஈராக்கிய படைகளின் மனங்களில் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தி போரிடும் ஆற்றலை மந்தமாக்கினர்.

## இலக்கிய விழா

(குருநகர்)

யாழ். பிரதான வீதி மன்ற அரங்கில் திருமறைக் கலா மன்றம் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் நடாத்தும் இலக்கிய விழா மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும். (21)

## பொது விகிதர்

ளைக் கோரியிருப்பதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் பரீட்சையில் சித்திபெற்றவர்களில் சுமார் 200பேர் பல்வேறு வெற்றிடங்களுக்கும் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அரசாங்க சேவையின் பல்வேறு துறை வெற்றிடங்களுக்குஆட்களைச்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் பெற்ற புள்ளிகள்

தலைப் புலிகளை இணை நடிக்க லாம். இதனால் இராணுவம் கிழக்குடன் மீளவும் தொடர்பை ஏற்படுத்த முடியும். ஆயுதங்களை அதிகரிக்கவும் படையின் புதிய உத்வேகத்தைப் பெறவும் உதவும். விடுதலைப் புலிகளுக்கான விநியோகத் தொடர்பை துண்டிப்பதன் மூலம் அவர்கள் சோர்வடைவார்கள்''

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகி ஒரு சில மாதங்களின் பின், முன்னாள் இராணுவ அதிகாரியான கேணல் பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கு பொருளாதாரத் தடையும், முற்றுகையும் அவசியம் என்பதைப் பீரிஸ் வற்புறுத்தினார். இந் நிலைப்பாடானது சிறிலங்கா அமைச்சிற்கும், வெளியிலும் பரவலாகவே இருந்தது. இராணுவ வெற்றி என்பது இராணுவ நடவடிக்கையுடன் இணைந்த பொருளாதார முற்றுகை மூலமே சாத்தியமாகக் கூடியது என பலர் வற்புறுத்தினர். இதன் அடிப்படையிலேயே 1990 ஒகஸ்டில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஜெனரல் சிறில் ரணதுங்கா 47 பொருள்கள் மீதான தடையை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதித்தார். அத்தோடு, விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடையானது தீவிரமாக அமுல்படுத்தப் படடும் வந்தது.

இவை அவ்வாறிருக்க 1992 இல் மேற்கொள்ளப்பட்டயாழ் குடாநாட்டின் இராணுவ முற்றுகையும் முன்னரே வகுத்துக் கொண்ட கொள்கையின் ஒரு பகுதியாகவே இருந்தது. அதாவது, வடபகுதி மீதான, குறிப்பாக யாழ். குடாநாட்டின் மீதான பொருளாதார முற்றுகை இறுக்குவதும், விடுதலைப் புலிகளுக்கான விநியோகத்தைத் துண்டிப்பதற்கான நோக்கம் கொண்டதாகவுமே இருந்தது. இதன் மூலம் இராணுவ வெற்றியை உறுதிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிலையில் விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக மேற்கொண்ட நல்லெண்ண சமிக்கைகள் கூட சிங்கள அரசாங்கத்தினாலும், இராணுவத்தினாலும் தவறான நோக்கிலேயே பார்க்கப்பட்டன. அவை புலிகளின் பலவீனத்தால் எழுந்த கோரிக்கைகள் என கருதப்பட்டன. அதாவது விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் நல்லெண்ண முயற்சிகள் யாவும் பொருளாதாரத்தடையினாலும், அதனை இறுக்கும் நோக்கிலான இராணுவமுற்றுகையாலும் அவதிப்படும் விடுதலைப்புலிகள் 'மூச்சு விடுவதற்குக் கோரும் ஓர் அவகாசம்' எது. இந்தப் பொருளாதார முற்றுகையைதளரச்செய்வதே விடுதலைப்புலிகளின் முக்கிய நோக்கம். இதற்கு ஆயர் கென்னத் பெர்னான்டோவின் வருகையை நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளனர்'' என 'ஐலண்ட்' எழுதியது.

இதேபோன்றேபத்திஎழுத்தாளர்சுமித்திர பெர்னாண்டோ ''இரண்டு பேரை விடுதலை செய்துவிட்டது என்பது தாயகத்தை விடுதலை செய்வதற்கான அவர்களது இரத்தம் சிந்தும் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டனர் என்பதை எடுத்துக்காட்டப் போதுமானதல்ல. இருவரை விடுதலை செய்துவிட்டு அவர்கள் கோருவது முழு அளவினதான இராணுவ தந்திரத்தை மாற்றும்படியாகும்'' என வியாக்கியானம் செய்தார்.

இந்நிலையில், யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும்—அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையானது பொருளாதார முற்றுகை மட்டிலும் தளர்ச்சியை

## - ஜெயராஜ் -

ஏற்படுத்தவில்லை. இரண்டாம் கட்ட ஈழப்போரில் நீண்டகாலப் போர் ஒன்றிற்காக சிறிலங்கா இராணுவம் வகுத்து வைத்துள்ள திட்டத்திலும் தடங்கல்களையும், தளம்பலையும்ஏற்படுத்தியிருந்தது என்றே கொள்ளலாம். அதிலும் குறிப்பாக, எரிபொருள் மீதான தடை நீக்கமானது விடுதலைப்புலிகளுக்கு கிடைத்த இராஜதந்திர ரீதியான பெரு வெற்றி என்றே கூறப்படுகின்றது.

இந்திய இராணுவத்தை இலங்கையை விட்டு வெளியேற்றுவதற்கென விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான இராஜதந்திர நடைமுறைக்கு அடுத்து புலிகளுக்கு கிடைத்த மற்றுமொரு இராஜதந்திர வெற்றி இதுவாகும். இவ் வெற்றியானது சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடந்த மூன்று வருடங்களுக்குமேலாககடைப்பிடித்துவரும் இராணுவத்தின் மூல தந்திரோபாயத்தை ஆட்டம் காணச்செய்துள்ளது எனக் கூறின் மிகையாகாது.

ஆனால், இப் பொருளாதாரத்தளர்ச்சியை சிறிலங்கா அரசாங்கம் நிரந்தரமாகக் கைக்கொள்ளுமா, அன்றிஓர் இடைக்கால நடவடிக்கையாக-அதாவது பொலிசார் முழுமையாகவிடுவிக்கப்பட்டதும்-அரசாங்கம் மீண்டும் மேற்கொள்ளுமா என்பது குறித்து திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது.

...யப்போவதில்லை. ஏனெனில் இவ்வாறாக ஏமாற்ற முற்படுவது சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்து புதியதொன்றல்ல.

ஆனால், முன்னர் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியது போல் தற்போது ஏமாற்றிவிட முடியாது. ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இதன் வெளிப்பாடாகவே கைதிகளின்விடுதலையை கட்டம் கட்டமாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளதாக ஊகிக்கமுடிகின்றது. ஆனால் கைதிகள் பரிமாற்றம் நிறைவு பெற்றதும் உடன்பாட்டை அரசால் கைவிடமுடியும். ஆனால் அது புலிகளுக்கோ, தமிழ் மக்களுக்கோ ஏமாற்றமாக இருக்கப்போவதில்லை. ஆனால் அது அரசாங்கத்திற்கே அவமானத்தைத் தேடித்தரும். உடன்பாடு ஒன்றை அரசு முறித்துக் கொண்டதாகக் கருதப்படும்.

ஆனால் இவ்விவகாரம் இலங்கை அரசியலைப் புதிய கட்டம் ஒன்றிற்கு நகர்த்திச் செல்லக்கூடியதாகும். இதுசிறிலங்கா அரசாங்கம் பொருளாதாரத் தடைமீதான தளர்ச்சியை எவ்வாறு கையாளப்போகின்றது என்பதைப் பொறுத்தது. அதாவது பொருளாதாரத் தடைத் தளர்ச்சியை, ஓர் இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான தீர்வை உருவாக்குவதற்கான ஒரு சூழலாகக் கொள்ளப்போகின்றதா, அன்றி விடுதலைப் புலிகள் போர்க்கைதிகள் மூலம் தம்மை பணிய வைத்து விட்டனர், அன்றி தோல்வி அடைய வைத்து விட்டனர்எனக் கருதி மீண்டும் போரை தீவிரமாக நடத்த முற்படுமா என்பதே கேள்வியாகும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்து இது ஒரு சமாதான சூழலை உருவாக்குவதற்கான வாய்ப்பாகவே கருதப்படுகின்றது. அரசாங்கப் பிரதிநிதியுடன் நடத்திய பேச்சுக்களின் போது புலிகள் இதனை தொடர்ந்து வலியுறுத்தியுள்ளனர். கைதிகள் விடுதலை தொடர்பாக முதல் சுற்றுப் பேச்சுகளின் போது பொருளாதாரத் தடையை நீக்குமாறு வலியுறுத்திய விடுதலைப் புலிகள் தாம் முன்வைத்துள்ள இந் நிபந்தனையினை ஒரு நல்லெண்ண சமிக்கையாக அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் இதன் அடிப்படையில் சமாதானத்திற்கும், பேச்சுவார்த்தைக்கும் உகந்த ஒரு சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்க வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

இதன் பின்னரும் அதாவது பேச்சு வார்த்தை வெற்றி அளித்த பின்னரும் விடுதலைப் புலிகள் இதனை வற்புறுத்தியுள்ளனர். இந்நிலையில் இவ்...

...லைப் புலிகள் கருதுவது போல் தெரிகின்றது.

இந்நிலையில், அடுத்த கட்டத்தை தீர்மானிப்பவர்களாக அரசாங்கமே உள்ளது. தற்பொழுது தளர்த்தியுள்ள பொருளாதாரத் தடையை கைதிகள் விடுதலையின் பின் இறுக்கலாம் என அரசாங்கம் கருதுமானால் அது நடைமுறைச் சாத்திய மற்றதொன்றல்ல. ஆனால் இது சிறிலங்கா மேற்கொண்ட ஓர் உடன்பாடு

...தற்கோ விடுதலைப் புலிகளையோ, தமிழ் மக்களையோ ஏமாற்றிவிட்டதாகவோ கருதுவதற்கு எதுவும் இருக்கப் போவதில்லை. மாறாக மக்களுக்கும், நாட்டிற்கும் கேடு செய்ததாகவே இருக்கும். அத்தோடு இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காணும் ஒரு சந்தர்ப்பத்தை டி. பி. விஜயதுங்கா அரசாங்கம் தவறவிட்டதாகவும் இருக்கும்.

## வளைகுடா

...த்ததன் மூலம் ஈராக்கிய விமானப்படையின் எதிர்ப்பு இல்லாமல் செய்யப்பட்டது. டயிற்சின் அதிரடிப்படை (கடற்படை) குவைத் கடற்கரையில் போலியான குண்டு வெடிப்புகளை ஏற்படுத்தி ஈராக்கியரின் கவனத்தை கடலின் பக்கம் திருப்ப தரைப்படை நகர்வு சாத்தியமாக்கப்பட்டது. இராணுவத்தின் விசேட அதிரடிப் படை பிரிவுகள் ஈராக்கினுள் நுழைந்து ஸ்கட் ஏவுகணை தளங்களை கண்டறிந்து அழிக்க உதவினர். சதாம் குசைனின் குடியரசு காவல் படை எனும் டாங்கிப்படை நகர்வு குறித்து தகவல் தந்த வண்ணமிருந்தனர். விமானம் மூலம் துண்டு பிரசுரங்கள் வீசியும் 'வளைகுடாவின் குரல்' (Voice of the Gulf) என்ற விசேட வானொலி நிகழ்ச்சி மூலம் ஈராக்கிய படைகளின் மனங்களில் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தி போரிடும் ஆற்றலை மந்தமாக்கினர்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அமெரிக்க படைகளின் விசேட அதிரடிப்படைப்பிரிவுகள் வளைகுடா 'பாலைவனப் புயல்' நடவடிக்கையை தமது சக போர்வீரர்களுக்கு சாதகமாக வீசச் செய்தனர்.

### வெளியில் அறியப்படாமல்...

1991 ஜூன் முதல் வாரம் வளை குடாவில் வெற்றியுடன் திரும்பிய அமெரிக்கப்படைகள் அமெரிக்க மக்களால் வரவேற்கப்படுகின்றனர். வாஷிங்டன், நியூயோர்க் எனும் பல நகரங்களில்படையினர்வெற்றி அணிவகுப்பு செய்து வீதிகளில் செல்ல எங்கும் ஒரே ஆரவாரமும் மகிழ்ச்சிப்பெருக்கும் காணப்படுகின்றதுவானொலி. தொலைக்காட்சியில் ஜனாதிபதி புஷ் தமது படைகளை பாராட்டி உரையாற்றுகிறார் படைகளின் தளபதி ஜெனரல் நோமன் ஸ்குவாஸ் கப்பாவ் அமெரிக்காவின் பெரும் வீரனாக அமெரிக்க மக்களால் வரவேற்கப்படுகிறார். அமெரிக்காவே பெரும் உற்சாகத்தில் மூழ்கியிருந்த அந்த வேளையில்......

பெயர் குறிப்பிடாத ஒரு தளத்தில் சில படைவிமானங்கள் வந்து இறங்குகின்றன. அரணுள் இருந்து அமெரிக்கப்படைகளின் இந்த விசேட அதிரடிப்படையினரில் 9000 பேர்இறங்குகின்றனர். வரவேற்க மக்கள் கூட்டமோ ஆரவாரமோ இல்லை. அவர்கள் வந்தது குறித்தும் எவருக்கும் தெரியாது. செய்தியாளர்கள் கூட அங்கு இல்லை. விமானத்திலிருந்து இறங்கிய அந்தப் படையினர் வாகனங்களில் ஏறி தத்தமது தளங்களுக்கு அமைதியாகவே புறப்படுகின்றனர். வளைகுடா போர் வெற்றியை தீர்மானித்தவர்கள் அமைதியாக சென்று மறைந்து விட்டனர். இரகசியப் படையினராகிய இவர்களின் பணி குறித்து உயர் அதிகாரிகளை தவிர சாதாரண மக்கள் அறிந்திருக்க நியாயமில்லை தான் ''அவர்கள் தம்மை போர் வீரர்களாக காட்டிக் கொள்ள விரும்பவில்லை. தமது தொழில்திறனைக் காட்டினர் அவ்வளவே இப்படியானமனநிலையே அவர்களிடம் உள்ளது. இவர்கள் தமது மூளையையும் ஆற்றலையும் பாலவன மண்ணில் காட்டி வந்துள்ளனர்'' என்றார் முன்னாள் பச்சை பெரட் பிரிவின் மேஜரான மெஸ்ஸிங்.

## இலக்கிய விழா

(குருநகர்)

யாழ். பிரதான வீதி மன்ற அரங்கில் திருமறைக்கலா மன்றம் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் நடாத்தும் இலக்கிய விழா மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும். (21)

## பொது லிகிதர்

...தைக் கோரியிருப்பதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் பரீட்சையில் சித்திபெற்றவர்களில் சுமார் 200பேர் பல்வேறு வெற்றிடங்களுக்கும் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அரசாங்க சேவையின் பல்வேறு துறை வெற்றிடங்களுக்குஆட்களைச்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் பெற்ற புள்ளிகள் அண்மையில் பரீட்சைத்திணைக்களத்தினால் சகலவிண்ணப்பதாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது தெரிந்ததே.

# மண்ணெய்குடித்த சிறுவன் ஆபத்தான நிலையில்

மண்ணெண்ணெய் குடித்த குழந்தை ஒன்று ஆபத்தான நிலையில் யாழ். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சப்பச்சிமாவடி மீசாலையைச் சேர்ந்த எஸ். அகிலன் [வயது02] என்பவரே மண்ணெண்ணெயை அருந்தியவராவர்.

இவர் நேற்று வீட்டில் விளையாடிக்கொண்டு இருக்கையில் வீட்டில் இருந்த மண்ணெண்ணெய் ரியூப்பைஎடுத்து அதில் இருந்த எண்ணெயைக் குடித்துள்ளார். (86)

# கெயர் ஸ்தாபனத்தின் உயரதிகாரி விஜயம்

(யாழ்ப்பாணம்)

அகில உலக கெயர் ஸ்தாபனத்தினரின் யாழ். மாவட்ட வேலைத் திட்டங்களைப்பார்வையிடுவதற்கும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆய்வுகளை மேற் கொள்வதற்குமாக மேற்படி ஸ்தாபன உயர் அதிகாரி திரு ஹுயிஸ் கொமியர் என்பவர் நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் 3 மணியளவில் மேற்படி உயரதிகாரி யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரை சந்தித்து மேற்படி நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை நடத்தியதாக தெரிய வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த கால வன்செயல்களால் 7000 பேர் விதவைகளாகியுள்ளனர். இவர்களுக்கான குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பிப்பது பற்றிமேற்படி சந்திப்பின் போது ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

இப்பிரதிநிதி இங்குள்ள அகதிமுகாம்களை பார்வையிடவுள்ளதாக இவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அதிரடிப்படை சூடு வீரப்பன் காயம்?

(சென்னை)

சேலம்மாவட்டம் குளத்தூர் காட்டில் வீரப்பனுக்கும் தமிழக அதிரடிப்படைக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் வீரப்பன் காயமடைந்தாராம். காயமடைந்து காட்டினுள் தப்பியோடிவிட்டவர்களில் வீரப்பனும் ஒருவராக இருக்கலாம் என பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார். இச்சம்பவத்தில் வீரப்பனின் நெருங்கிய சகா ஒருவர் பலியானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமுற்ற வீரப்பன் உட்பட ஐவர் காட்டினுள் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும், சண்டை இடம்பெற்ற பகுதியில் ஏழு உள்ளூர்த் துப்பாக்கிகளும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸ்அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடற்படையினரின்

பதிப்பிள்ளை என்ற மீனவர் காயம் எதுவுமின்றித் தப்பிக் கொண்டார்.

இச்சம்பவம் நடைபெற்ற வேளை ஒரு மைல் தூரத்தில் உள்ள பருத்தித்துறை இறங்குதுறையூடாகக் கொழும்புக்குச் செல்ல விசேட தூதுவர் பிரிகேடியர் வீரசேகரா வந்துநின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (யோ)

கரும்புலிகள்

மைதானம் என்பனவற்றில் கிளித்தட்டு நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

ஏனைய தினங்களில் நடைபெறவுள்ள போட்டிகளின் நேர விபரங்கள் நாளைய ஈழநாதத்தில் வெளிவரும்.

# வீரவணக்க கூட்டம்

(அரியாலை)

6ஆம் மாதங்களில் (ஜூன் மாதம்) வீரச்சாவடைந்த வடமராட்சி-வடகிழக்கு கடற்புலிகள் பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் இன்று இரவு 8-00 மணிக்கு நாகர்கோவில் முருகையா மைதானத்தில் நடைபெறும்.

இவ் வீரவணக்க கூட்டத்தில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் நினைவுப் பேருரைகளும், அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (90)

# கம் உதாவ நிகழ்ச்சியை ஹேமா பகிஷ்கரித்தார்

[கொழும்பு]

கிராம எழுச்சியை எதிர்ப்பவர்கள் கட்சிக்குள்ளிருந்து கொண்டு கட்சியை அழிக்க முற்படுபவர்கள். எனவே எவராலும் கிராம எழுச்சியை அழிக்கமுடியாது. ஜூன் 23ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் பிறந்த தினத்தன்றே அதனை கொண்டாடவேண்டும் இதுவே சாலச் சிறந்தது என அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்தார்.

கிராம எழுச்சி நிகழ்ச்சிக்கு நேற்று முன்தினம் தலைமை தாங்கும்போது மேற்படி கருத்தை வலியுறுத்தினார். கிராம எழுச்சி மக்கள் எழுச்சி எனவேமக்களுக்காக இதனை செய்யவேண்டும். தனிப்பட்ட ஒருசிலரின்கருத்துக்களை கொண்டதல்ல ஐக்கியதேசியக்கட்சி என்பதை சகலரும் நன்கு உணரவேண்டும் என்றார்.

இதேவேளை இக் கிராம எழுச்சியில் கலந்து கொள்ளுமாறு திருமதி ஹேமா பிரேமதாசாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் இவர் கலந்து கொள்ளவில்லை. எனவே ஐக்கிய தேசிய கட்சியில் உட்பூசல்கள் தற்போது வெளி அரங்குகளுக்கு வரத் தொடங்கியுள்ளதாக யுக்திய பத்திரிகை ஆசிரியர் சுகந்த தேசபிரிய தெரிவித்தார். ஐ. தே. கட்சிப் பிளவு உச்சக் கட்டத்தை அடைந்ததை தொடர்ந்து தலைவராக சிறிசேன கூரே இருக்கும் போதே ஐக்கிய தேசியக் கட்சியின் கிளைகளின் தலைவராக சுனில் முனசிங்காவை நியமித்து சிறிசேன கூரேயின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளதாக சுகந்த தேசபிரிய தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; பிரேமதாசாவை மோசமாக விமர்சனம் செய்தவரான பிரேமதாச உடுகம் பொலவை மீண்டும் நாட்டுக்குள் அழைத்து அவருடன் ஜனாதிபதி நீண்டநேரம் கருத்து பரிமாறியுள்ளார். எனவே மிக விரைவில் ஐ. தே. க. பெரிய அளவிலான பிளவைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்று இவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## ராவ் நிரூபிக்க வேண்டும்

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருவதாக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தெரிவித்தார். தனது இரண்டு ஆண்டு கால ஆட்சி நிறைவுற்றது தொடர்பாக கட்சியின் சாதனைகளை அவர் செய்தியாளர்களிடையே விபரித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பங்குத்தரகர் ஹர்சத் மேத்தா கூறிய குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜெயலலிதா, பிரதமர் நரசிம்மராவ் தாம் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்கவேண்டும் என்றார்.

# நுண்கலை மன்றத் தேர்வுகள்

வடஇலங்கை நுண்கலை மன்ற 1993ஆம் ஆண்டுக்குரிய தேர்வு விண்ணப்பங்கள் ஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன் ஏற்றுக்கொள்ளப் படவிருக்கின்றன.

விண்ணப்பப் பத்திரங்களை யாழ். கல்வித் திணைக்களத்திலுள்ள சங்கீத சபை அறையிலும், மருதனார்மடம், சாவகச்சேரி, பண்டத்தரிப்பு. பருத்தித்துறைகோட்டக் கல்விஅலுவலகங்களிலும், அதே கோட்டங்களின், சித்திர பாட ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

நடந்து முடிந்த தேர்வுகளில் ஆயிரக்கணக்கான தேர்வுநாடிகள் தோற்றி 75 சத வீதமானோர் சித்தி பெற்றுள்ளனர். முதல் முறையாக 11 பேர் ஆசிரியர் தரத்தில் சித்தி பெற்றதுடன் மூவர் முதலாம் பிரிவிலும் தேறியுள்ளனர் என்று யாழ். கல்விப்பிரதேசக் கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

பொருளாதார

ள்ளது.பேச்சுவார்த்தை நடைபெறுமா என்பது போகப் போகத்தான் தெரியும் என பி. பி.ஸி. தனது கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

அக்கண்ணோட்டத்தில் மேலும் இப்பொருளாதாரத் தடை இருபகுதியினருக்கும் நன்மை. தமிழ் மக்களுக்குத் தடைசெய்யப்பட்ட பொருள்கள் சில கிடைக்கின்றன. அரசாங்கத்திற்கு 39 கைதிகள் விடுதலையாவதுடன் உதவி வழங்கும் நாடுகளின் கண்டனத்தைக் குறைக்கவும் முடியும் எனவும் தெரிவித்தது

அராலிக்

யுள்ளது.

இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களின் அடையாளம் குறித்து ஆணைக்குழு எதுவும் தெரிவிக்கவில்லை.

வாகனம் தரைக்கண்ணிமீது சென்றபோது அது வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இது சிரேஷ்ட உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளரின் சாட்சியத்தை ஓரளவு ஆதரிக்கும் விதத்தில் அமைந்திருப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் குண்டு வைக்கப்படுவதற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பாகும் என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

ஆணைக்குழு மே மாதம் 26ஆம் திகதி அதன் விசாரணையை ஆரம்பித்தது. இங்கு விசாரணைகளை முடித்துக் கொண்டபின்னர் பிரிட்டிஷ் வெடிகுண்டுநிபுணர் ஜோனின் சாட்சியத்தைப் பதிவு செய்வதற்காக ஆணைக்குழு ஜூன் மாதம் 12ஆம் திகதி லண்டன் சென்றிருந்தது. ஜோன் திருமதி கொப்பேக்கடுவாவினால்குறிப்பிடப்பட்ட ஒருசாட்சியாவார்.

பொதுநலவாய நாடுகளின் நீதிபரிபாலன அதிகாரிகள் இக் குழுவில் அங்கம் வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## தேசிய பாடசாலையானது

எமது வளர்ச்சிக்கெல்லாம்
அடித்தளம் அமைத்திட்ட
சாவகச்சேரி இந்துவே
தேசிய பாடசாலையாக மேம்பட்டு நிற்கும்
உனது வளர்ச்சி கண்டு - பூரிப்படைகின்றோம்
நன்றியுணர்வுடன் நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

"மணியம் வளவு" வாழ்த்தும் மாணாக்கர்கள்,
தாமோதரம் வீதி, செ.யோகேஸ்வரன் குடும்பம்
சாவகச்சேரி, யோ. ஜெயக்குமார் குடும்பம்.
1993. 06. 25 (5208)

## ★ நல் வாழ்த்துக்கள் ★

எமது தென்மராட்சிப் பகுதியில் தேசியபாட
சாலையாகத் தரமுயர்ந்து மிளிரும்

– சாவகச்சேரி இந்துக் கல்லூரி –

தன்னிறைவு பெற்று தலையெடுத்தோங்க
எம்மனமுவந்த வாழ்த்தினையும்
நல்லாசியினையும் தெரிவிக்கின்றோம்!

உசன் கொத்தணிப்பாடசாலை
அதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(5215)

## இணைப்பாளர்கள் தேவை

தனியார்கல்வி நிலையம், கல்வி அபிவிருத்திக் கழகத்திற்கும் கல்விக் கோட்ட ரீதியாக இணைப்பாளர்கள் தேவை. க. பொ. த. உயர்தரத் தேர்வில் சித்தியடைந்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 30-06-93 க்கு முன்னதாக நல்லூரில் அமைந்துள்ள தமிழீழக்கல்விக் கழக நடுவப் பணியகத்திற்கு சேர்ப்பிப்பதுடன் 2-7-93 வெள்ளிக்கிழமை மு ப. 9.00மணிக்கு நடைபெறவிருக்கும் நேர்முகத் தேர்வில் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்கள், அனுபவம் அல்லது மேலதிக தகைமையினை வெளிப்படுத்துவதற்கான சான்றிதழ்களுடன் சமுகம் கொடுக்கவும்,

பொறுப்பாளர்
தமிழீழக் கல்விக் கழகம்
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(சி-6892]

தென்னம் தோட்டப்
பராமரிப்பு அலுவலர்

## தேவை

தென்னைகளை வளப்படுத்தி பராமரிப்பதில் முன் அனுபவமுள்ள 55 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும். தென்மராட்சிப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

விளம்பர இல: 192
மே/பா ஈழநாதம்
31 மகேந்திரா, வீதி,
யாழ்ப்பாணம்.

(5217)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 24-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10042

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 26-3937, | 26-1690, | 27-5535, | 26-6026, | 28-4550, |
| 26-8878, | 26-6775, | 26-3495, | 22-6163, | 28-6640, |
| 24-7087, | 24-8429, | 24-3594, | 24-9744, | 26-5782, |
| 24-4367, | 26-0403, | 24-9758, | 27-6887, | 41-9530. |
| 24-2024, | 22-9193, | 24-5177, | 28-2156, | 26-2585, |
| 26-1169, | 24-0207, | 41-0976, | 41-9855, | 26-7187, |
| 24-5460, | | | | |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 27-6563, | 24-1040, | 26-0767, | 27-5775, | 27-9052, |
| 43-3576, | 41-8467, | 26-8600, | 24-3258, | 27-7081, |
| 24-6489, | 28-9259, | 26-1321, | 26-9658, | 41-8449, |
| 26-6933, | 26-4281, | 26-4579, | 26-1609, | 24-7623, |
| 24-9490, | 26-0852, | 26-1376, | 26-3321 | |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.